அந்தரங்கமானது

NEW/OLD

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

29 - தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்

(புதிய / பழைய பாடத்திட்டம்)

புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

Department of Examinations - Sri Lanka

Department of Examinations - Sri Lanka

க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)
29 - தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்
புதிய /பழைய பாடத்திட்டம்
புள்ளி வழங்கும் விதம்

- பத்திரம் I

  காலம் 2 மணித்தியாலம்
  5 விடைகளைக் கொண்ட 50 பல்தேர்வு வினாக்கள், சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

- பத்திரம் II

  காலம் 3 மணித்தியாலம்

குறைந்தது ஒரு பகுதியில் வினாக்கள் 02 வீதம் தெரிவு வினாக்கள் 5 இற்கு விடை எழுதியிருத்தல் வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளி வீதம் மொத்த புள்ளிகள் 100.

இறுதிப் புள்ளி கணித்தல்	பத்திரம் I	50
	பத்திரம் II	100

இறுதிப்புள்ளி $50 + \frac{100}{2} = 100$

Department of Examinations - Sri Lanka

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

உதாரணம் - வினா இல 03

(i) ..... ✓ △ 4/5

(ii) ..... ✓ △ 3/5

(iii) ..... ✓ △ 3/5

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

Department of Examinations - Sri Lanka

கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

• • •

Department of Examinations - Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව/පැරණි නිර්දේශය – புதிய/பழைய பாடத்திட்டம் – New/Old Syllabus

NEW/OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I
Communication and Media Studies I

29 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

அறிவுறுத்தல்கள்:

* இவ்வினாத்தாள் **A, B, C** ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது. பகுதி **A** பழைய, புதிய பாடத்திட்டங்களுக்கான பொதுவான வினாக்களையும், பகுதி **B** பழைய பாடத்திட்டத்திற்கான வினாக்களையும், பகுதி **C** புதிய பாடத்திட்டத்திற்கான வினாக்களையும் கொண்டது.
* பகுதி **A** இல் **1** முதல் **25** வரையான அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக. பகுதி **B**, பகுதி **C** ஆகியவற்றில் ஒரு பகுதியை மாத்திரம் தெரிவுசெய்து **26** முதல் **50** வரையான அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

பகுதி A

1. தொடர்பாடல் செயன்முறையில் 'வலியுறுத்தலின்' முக்கியத்துவத்தை கூறியிருந்தவர் பின்வருபவர்களில் யார்?
(1) வில்பர் ஷ்ராம் (2) ஷ்ராம் மற்றும் ஒஸ்கூட் (3) எட்வேர்ட் சப்பியர்
(4) ஷனொன் மற்றும் வீவர் (5) ஹரோல்ட் லாஸ்வெல்

2. செய்தியொன்றில் உள்ள குறியீடுகள் பொருட்கோடல் செய்யப்படுவதால் புரிந்து கொள்ளப்படுவது
(1) குறிமுறையவிழ்ப்பு ஆகும். (2) குறிமுறையாக்கம் ஆகும்.
(3) மொழிபெயர்ப்பு ஆகும். (4) அறிக்கையிடல் ஆகும்.
(5) பின்னூட்டம் ஆகும்.

3. ஊடகச் செய்திகளுக்கும் கருத்துருவாக்கத் தலைவர்களுக்கும் இடையிலான உறவு விளக்கப்படுவது
(1) அனுபவக் களம் ஆகும். (2) சமூகமயமாதல் ஆகும்.
(3) வாயிற்காப்பு எண்ணக்கரு ஆகும். (4) இருபடி எண்ணக்கரு ஆகும்.
(5) தூண்டற்பேறு கோட்பாடு ஆகும்.

4. வெகுசன ஊடகப் பெறுநர்கள் தொடர்பில் உண்மையானது எது?
(1) பெறுநர்களின் வகிபங்கு செயற்படுதன்மையானது.
(2) நேரடியான பின்னூட்டம் தரப்படுகின்றது.
(3) விளங்கறிவு சமநிலையில் காணப்படும்.
(4) அது பல்தன்மையான ஒரு குழு ஆகும்.
(5) பரந்த மகிழ்ச்சிக் களம் காணப்படாது.

5. போலியான நுகர்வோர் தேவைகளை உருவாக்கும் பிரதான வெகுசன ஊடகப் புலம்
(1) வானொலி ஆகும். (2) சினிமா ஆகும்.
(3) தொலைக்காட்சி ஆகும். (4) இணையம் ஆகும்.
(5) சமூக ஊடகம் ஆகும்.

6. 'புத்தாக்கங்களின் பரவல்' என்ற அபிவிருத்தி எண்ணக்கருவை அறிமுகப்படுத்திய சமூகவியலாளர் பெயர் யாது?
(1) வில்பர் ஷ்ராம் (2) டட்லி சியர்ஸ் (3) மகாத்மா காந்தி
(4) விமல் திசாநாயக்க (5) எவரெட் எம். ரோஜர்ஸ்

Department of Examinations - Sri Lanka

7. அபிவிருத்தி அடிப்படையில், இரண்டாம் உலக நாடாக வகைப்படுத்தப்படும் நாடு எது?
(1) கனடா (2) அவுஸ்திரேலியா (3) நியூசிலாந்து
(4) சோவியத் ரஷ்யா (5) ஐக்கிய இராச்சியம்

8. பின்வருவனவற்றுள் எந்த ஊடகம் காட்சிக் குறியீடுகளை வலுவாகவும் படைப்பாக்கத்துடனும் பயன்படுத்துகின்றது?
(1) தொலைக்காட்சி (2) சுவரொட்டி (3) சினிமா
(4) புகைப்படம் (5) ஓவியம்

9. வாய்மொழி சாராத தொடர்பாடல் பற்றிய சரியான கூற்று எது?
(1) உடல் மொழியால் மாத்திரம் நிகழ்த்தப்படுவது
(2) சைகை மொழியை மாத்திரம் பயன்படுத்துவது
(3) எழுதும்போது அது பயன்படுத்தப்படுவதில்லை.
(4) உடல் மொழியின் அர்த்தம் நாட்டுக்கு நாடு வேறுபட முடியும்.
(5) மேளம், சைரன் போன்ற ஒலிகள் உள்ளடக்கப்படுவதில்லை.

10. குறியீடுகள்
(1) நடனத்துடன் தொடர்புடையவை.
(2) வாய்மொழித் தொடர்பாடலையும் கடந்து செல்பவை.
(3) இன்னொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துபவை.
(4) மதச் சிந்தனைகள் தொடர்பாடப்படுவதற்கு உதவுபவை.
(5) காட்சிகளைப் பிரதிநிதிப்படுத்துபவை, ஒலிகளை அல்ல.

11. ஆளிடைத் தொடர்பாடல் பற்றிய தவறான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) அது நேருக்கு நேர் நிகழ்த்தப்பெற முடியும்.
(2) எப்போதும் தொழினுட்பத்தைப் பயன்படுத்த முடியாது.
(3) வாய்மொழிசாராத் தொடர்பாடல் வழியாக வலுப்படுத்தப்படலாம்.
(4) குழுத் தொடர்பாடலில் இடம்பெற முடியாதது.
(5) உணர்வுகளை அதிக வினைத்திறனுடன் வெளிப்படுத்தலாம்.

12. உத்தியோகபூர்வ அறிவிப்பு ஒன்று நிறுவனமொன்றின் தலைவரால் பணியாளர்கள் அறிந்து கொள்வதற்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இந்தச் சூழலில் பயன்படுத்தப்பட்ட தொடர்பாடல் வடிவங்கள் எவை?
(1) முறைசார், எழுத்து, காட்சி வடிவங்கள்
(2) முறைசார், வாய்மொழிசாரா, எழுத்து வடிவங்கள்
(3) வாய்மொழிசாரா, காட்சி, முறைசாரா வடிவங்கள்
(4) எழுத்து, காட்சி, முறைசாரா வடிவங்கள்
(5) காட்சி, வாய்மொழிசாரா, முறைசார் வடிவங்கள்

13. "நீங்கள் கூற முனைபவற்றை விவசாயிகளிடம் தெளிவாகச் சொல்லுங்கள். அப்போது அவர்கள் அதனைப் புரிந்து கொள்வார்கள்."
பின்வருபவர்களில் எவர் இங்கு வெளிப்படுத்தப்பட்ட சிந்தனையை ஒத்த தொடர்பாடல் வரைவிலக்கணத்தை உருவாக்கியிருந்தார்?
(1) சார்ள்ஸ் கூலி (2) வில்பர் ஷ்ராம் (3) எட்வேர்ட் சப்பியர்
(4) குளோட் ஷனொன் (5) ஹரோல்ட் லாஸ்வெல்

14. பாடசாலையை அழகுபடுத்துவதற்கு நிதியைத் திரட்டுவதற்கு மாணவர்கள் விரும்பியிருந்தனர். அதற்காக, ஒரு ஸ்ரிக்கரை வடிவமைக்க அவர்கள் கலந்துரையாடினர். பின்வரும் தொடர்பாடல் வகைகளில், எது இந்தச் சந்தர்ப்பத்தை விவரிக்கின்றது?
(1) வாய்மொழித் தொடர்பாடல் (2) குழுத் தொடர்பாடல்
(3) ஆளிடைத் தொடர்பாடல் (4) பேச்சுத் தொடர்பாடல்
(5) படைப்பாக்கத் தொடர்பாடல்

Department of Examinations - Sri Lanka

15. வெகுசனத் தொடர்பாடலின் ஆகக் குறைந்த முக்கியமான பணி எது?
(1) பன்முகக் கருத்தியல்களை உருவாக்குவது
(2) சமூகமயமாதல்
(3) பெறுநர்களின் தேவைகளோடு ஒத்திருப்பது
(4) சமூக மரபுரிமைகளை ஊடுகடத்துவது
(5) சமூக வளர்ச்சிக்கான தூண்டலைத் தருவது

16. தவறான கூற்றைத் தெரிவுசெய்க.
பொதுசனத் தொடர்பு என்பது அதிகமாக
(1) ஓர் இருவழிச் செயன்முறையாகும்.
(2) சந்தைப்படுத்தல் செயன்முறையாகும்.
(3) முகாமைத்துவச் செயன்முறையாகும்.
(4) பிரசாரத்திலிருந்து வேறுபட்டதாகும்.
(5) நீண்டகாலப் பெறுதிகளை எதிர்பார்த்திருப்பதாகும்.

17. வெகுசன ஊடகச் செயன்முறையில், வெளித்தரப்பொன்றின் வழிகாட்டலின்றி நிகழ்பெறுவது
(1) பொறுப்புக்கூறல் ஆகும். (2) கடமைப் பொறுப்பு ஆகும். (3) மதிப்பீடு ஆகும்.
(4) ஒழுக்க நெறிமுறைகள் ஆகும். (5) கட்டுப்பாடு ஆகும்.

18. சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) குழுத் தொடர்பாடல் இரண்டு தரப்புக்களிடையே மாத்திரம் நிகழும்.
(2) ஆளிடைத் தொடர்பாடல் ஒருவழி ஆனதாக நிகழும்.
(3) ஆளுள் தொடர்பாடல் புலக்காட்சியைத் தவிர்க்கின்றது.
(4) குழுத் தொடர்பாடல் பெறுநர்களின் எண்ணிக்கையில் மாத்திரம் தங்கியிருக்கின்றது.
(5) ஆளிடைத் தொடர்பாடல் இரண்டு தரப்புக்களிடையே மாத்திரம் நிகழும்.

- பின்வரும் தகவல்களை **19 - 21** வரையிலான வினாக்களுக்குப் பயன்படுத்துக.

தொடர்பாடல் மாதிரிகள் மூன்று கீழே தரப்பட்டுள்ளன.
A - ஹரோல்ட் லாஸ்வெல் மாதிரி
B - ஷெனொன் மற்றும் வீவர் மாதிரி
C - ஷ்ராம் மற்றும் ஒஸ்கூட் மாதிரி

19. குறிமுறையாக்கம் மற்றும் குறிமுறையவிழ்ப்பில் கவனஞ்செலுத்தும், ஆனால் ஓர் நேர்வழிச் செயன்முறையாகக் காட்டப்படாத தெரிவு
(1) A மாத்திரம் (2) A, B ஆகியன மாத்திரம் (3) B மாத்திரம்
(4) B, C ஆகியன மாத்திரம் (5) C மாத்திரம்

20. "வருணி, இந்தக் குறுகிய காலத்தில் நீங்கள் கொஞ்சம் பருமனாகி விட்டீர்கள். என்னுடைய கண்ணாடியைப் பயன்படுத்தாது, உங்களை என்னால் அடையாளங்காண முடியவில்லை. தொடர்பாடல் காரணிகளின் அடிப்படையில் இந்தக் கூற்றை விளக்குவதற்கு மிகப் பொருத்தமான தெரிவு
(1) A மாத்திரம் (2) A, B ஆகியன மாத்திரம் (3) B மாத்திரம்
(4) B, C ஆகியன மாத்திரம் (5) A, B, C ஆகிய அனைத்தும்

21. "சூழ்நிலையின் நன்மை, தீமைகள் இரண்டைப் பற்றியும் சீதா ஆழமாக ஆராய்ந்தார். தகவல்களைக் கவனமாக மதிப்பிட்டதன் பின்னர், சீதா இந்த முடிவுக்கு வந்தார்." இது விபரிக்க முடியுமாக அமைவது
(1) A இனைப் பயன்படுத்துவதனால். (2) A மற்றும் B இனைப் பயன்படுத்துவதனால்.
(3) B இனைப் பயன்படுத்துவதனால். (4) B மற்றும் C இனைப் பயன்படுத்துவதனால்.
(5) C இனைப் பயன்படுத்துவதனால்.

22. வெகுசன ஊடகங்களின் செயற்பாடுகள் தொடர்பிலான அடிப்படையான புரிதல் தொடர்புபடுவது
(1) கண்காணிப்புடன் ஆகும்.
(2) சமூகமயமாதலுடன் ஆகும்.
(3) தர்க்கரீதியான சிந்தனையுடன் ஆகும்.
(4) ஊடகப் பண்பாட்டுடன் ஆகும்.
(5) ஊடக விளங்கறிவுடன் ஆகும்.

Department of Examinations - Sri Lanka

23. நாட்டார் ஊடகங்களின் பின்வரும் இயல்புகளைக் கருத்திற்கொள்க.

A - அது வழக்கமாக வாய்மொழி சார்ந்தது.
B - அது நிரணயிக்கப்பட்ட அடையாளத்தைக் கொண்டது.
C - அது ஒரு வடிவத்தை மாத்திரம் கொண்டது.
D - அந்தந்தப் பகுதிகளுக்குரியதாக விசேடமானதாகும்.

மேலுள்ள கூற்றுகளில் சரியானவை

(1) *A*, *B* ஆகியன மாத்திரம் (2) *A*, *D* ஆகியன மாத்திரம்
(3) *B*, *C* ஆகியன மாத்திரம் (4) *B*, *D* ஆகியன மாத்திரம்
(5) *C*, *D* ஆகியன மாத்திரம்

24. நிறுவனத்தின் வெளியகப் பொதுசனத் தொடர்புக்குப் பொருத்தமான கருவிகளையும் வழிமுறைகளையும் உள்ளடக்கியிருக்கும் தெரிவினைத் தெரிவுசெய்க.

(1) கண்காட்சிகள், புகைப்படங்கள், அனுசரணைகள், நேரடி அழைப்பு இலக்கங்கள்
(2) பிரசுரங்கள், நகரும் கண்காட்சிகள், செய்திமடல், அறிவித்தற் பலகை
(3) நலன்புரி அமைப்புக்கள், புகைப்படங்கள், கண்காட்சிகள், நேரடி அழைப்பு இலக்கங்கள்
(4) செய்திமடல், அறிவித்தற் பலகை, அன்பளிப்புக்கள் வழங்குதல், ஊடக சந்திப்புக்கள்
(5) நிகழ்வுகள் ஒழுங்கமைப்பு, நலன்புரி அமைப்புக்கள், புகைப்படங்கள், அனுசரணைகள்

25. ஊடகக் குவிகைக்குப் பொருத்தமற்ற கூற்று எது?

(1) பல்வேறு ஊடகங்கள் மையப்படுத்தப்படுதல்
(2) எண்ணிம வெளியில் வளர்ச்சி பெறுதல்
(3) பிரஜைகள் ஊடக வாய்ப்புக்களை மட்டுப்படுத்துதல்
(4) செய்தி விநியோகத்திற்கான பரந்த வெளியின் உருவாக்கம்
(5) இணைய நீட்சியின் வழியாக வெகுசன ஊடகங்கள் முன்னிலை பெறுதல்

பகுதி B

26. பல்வேறு தகவல்களை ஆய்வுசெய்து, அவற்றைப் பெறுநர்களுக்கு முன்வைக்கும் வெகுசன ஊடகங்களின் கடமை எனப்படுவது

(1) தூண்டல் என்பதாகும். (2) பொருட்கோடல் என்பதாகும்.
(3) கண்காணிப்பு என்பதாகும். (4) இணைப்பாக்கம் என்பதாகும்.
(5) சமூகமயமாதல் என்பதாகும்.

27. அறிவினை மேம்படுத்தலில் பயன்படுத்தப்படும் உத்தி

(1) ஆழ்பரிவு ஆகும். (2) மையப்படுத்தல் ஆகும்.
(3) குறியீட்டாக்கம் ஆகும். (4) ஒன்றிணைத்தல் ஆகும்.
(5) பரீட்சார்த்தம் ஆகும்.

28. புதிய தாராண்மைவாதம் பற்றிய பொய்யான கூற்று எது?

(1) அது பூகோளமயமாதலின் ஒரு பேறாகும்.
(2) அது ஊடகங்கள் வழியாகச் செயற்படுகின்றது.
(3) அது தேசிய பொருளாதாரம் ஒன்றிற்கு இட்டுச் செல்கின்றது.
(4) மேலைத்தேய அதிகாரத்தை அது பிரசித்தப்படுத்துகின்றது.
(5) வர்த்தக அதிகாரத்தினால் அது கட்டுப்படுத்தப்படுகின்றது.

29. தொலைக்காட்சி விளம்பரமொன்றில் இளைஞன் ஒருவன் "குறித்த வியாபாரக் குறியினால் அடையாளப்படுத்தப்படும் குளிர்பானமொன்று இல்லாது உணவருந்த விருப்பம் இல்லை" எனக் கூறினான். இந்த விளம்பரம் குறித்து நிற்கும் பண்பாட்டு அம்சம்

(1) பண்பாட்டுத் தேக்கம் ஆகும். (2) பண்பாட்டு அதிர்வு ஆகும்.
(3) பண்பாட்டுப் பரிமாற்றம் ஆகும். (4) பிரசித்த பண்பாடு ஆகும்.
(5) பண்பாட்டுப் பரவுகை ஆகும்.

Department of Examinations - Sri Lanka

30. மொழி உள்வாங்கப்பெறுதல் தொடர்பில், நிலாவினி வகுப்பறையில் சில பார்வைகளை முன்வைத்தாள்.

A - மொழியைப் பயன்படுத்தும் தேர்ச்சி

B - அது உயிரியல் அடிப்படையைக் கொண்டிருக்கின்றது.

C - அது சமூகப் பண்பாட்டு அடிப்படையைக் கொண்டிருக்கின்றது.

D - பிறப்பால் அது நிர்ணயிக்கப்படுகின்றது.

மேற்படி கூற்றுக்களில் உண்மையானவை

(1) *A*, *C* ஆகியன மாத்திரம் (2) *B*, *C* ஆகியன மாத்திரம்

(3) *A*, *B*, *C* ஆகியன மாத்திரம் (4) *A*, *B*, *D* ஆகியன மாத்திரம்

(5) *B*, *C*, *D* ஆகியன மாத்திரம்

31. செய்தியொன்றின் படைப்பாக்கத்தன்மையை மதிப்பிடும் முக்கிய அம்சம்

(1) அதன் நிகழ்த்தப்பெறுதல் தரம் (2) அதன் எண்ணக்கருவாக்கத் தகைமை

(3) அதன் சுயமான தன்மை (4) அதன் ஒத்திசையும் தகைமை

(5) அதன் அகவயத் தன்மை

32. "எனது சகோதரனும் அவனுடைய நண்பர்களும் பேசிக்கொள்வதை என்னாலும் எனது சகோதரியினாலும் எப்போதும் புரிந்துகொள்ள முடிவதில்லை. வார்த்தைகளை நாம் புரிந்துகொண்டாலும், அர்த்தங்கள் பிரச்சினையாகவுள்ளன." இந்தப் பிள்ளை சந்திக்கும் சிக்கலான நிலைக்குக் காரணம்

(1) துணைப் பண்பாடு ஆகும்.

(2) சமூகமயமாதல் ஆகும்.

(3) எதிர்ப் பண்பாடு ஆகும்.

(4) அனுபவக்களம் ஆகும்.

(5) பண்பாட்டு ஒன்றிணைப்பு அல்லது உறுதுணை ஆகும்.

33. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - ஒருவர் தன்னுடன் இணைந்திருக்கும் மக்களின் வகிபாங்கினை நிகழ்த்துதல்

B - முன்மாதிரிகளின் பண்புகளை ஏற்று அவற்றைக் கைக்கொள்தல்

C - ஒருவருடன் நெருக்கமாகி, அவரது அனைத்துத் தனிப்பட்ட நடத்தைக் கோலங்களையும் உள்வாங்குதல்

மேற்படி கூற்றுகளின்படி, சமூகமயமாதல் வழிமுறைகளை சரியான வரிசைக்கிரமத்தில் காட்டும் தெரிவினைத் தெரிவுசெய்க.

(1) வகிபாகமேற்றல், பின்பற்றுதல், போலச்செய்தல்

(2) வகிபாகமேற்றல், போலச்செய்தல், பின்பற்றுதல்

(3) போலச்செய்தல், பின்பற்றுதல், வகிபாகமேற்றல்

(4) போலச்செய்தல், வகிபாகமேற்றல், பின்பற்றுதல்

(5) பின்பற்றுதல், வகிபாகமேற்றல், போலச்செய்தல்

34. கய எண்ணக்கரு பற்றிய தவறான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) பௌதிகத் தோற்றத்தில் தங்கியிருப்பது.

(2) விருத்திசெய்ய முடியுமானது.

(3) அது பிறப்பிலிருந்து வரும் அம்சமொன்றல்ல.

(4) அடுத்தவர்களால் ஒருவர் ஏற்றுக்கொள்ளப்படும் விதம்.

(5) சமூகத்தில் ஒருவர் தனித்துவமான அடையாளத்தை விருத்திசெய்ய அனுமதிப்பது.

35. பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - 1 : பண்பாட்டுப் பரிமாற்றம்

2 : திட்டமிட்டும் அதேவேளை திட்டமிடப்படாமலும் நடைபெற முடியும்.

B - 1 : பண்பாட்டு ஆக்கிரமிப்பு

2 : வணிகரீதியான உள்நோக்கத்தைக் கொண்டிருக்காதது.

C - 1 : பண்பாட்டு அதிர்வு

2 : சொந்தப் பண்பாடுகளை அலட்சியப்படுத்துவதன் ஒரு பெறுதி

மேற்படி கூற்றுகளில் நேரடித் தொடர்பினைக் காட்டும் சோடி / சோடிகளைத் தெரிவுசெய்க.

(1) A மாத்திரம் (2) A, B ஆகியன மாத்திரம்

(3) A, C ஆகியன மாத்திரம் (4) B மாத்திரம்

(5) B, C ஆகியன மாத்திரம்

Department of Examinations - Sri Lanka

38. நீங்கள் எடுத்த புகைப்படமொன்றை, உங்களின் அனுமதியின்றி வேறொருவர் தனிப்பட்ட ஆதாயத்துக்காகப் பயன்படுத்துகிறார் எனக் கற்பனை செய்துகொள்க. அவ்வாறான சூழலில் உங்களுக்கு நீதி கிடைக்க முடியுமாக இருப்பது

(1) பத்திரிகை பேரவைச் சட்டத்தின் வழியாக.
(2) தகவலறியும் உரிமைச் சட்டத்தின் வழியாக.
(3) புலமைச் சொத்துச் சட்டத்தின் வழியாக.
(4) மனித உரிமைகளுக்கான அனைத்துலகப் பிரகடனத்தின் வழியாக.
(5) அரசியலமைப்பின் 14 (1) (a) பிரிவின் வழியாக.

39. தனது பரீட்சை முடிவுகளை அறியக் கிடைத்த சுரேஷின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் திரண்டது. சினிமாவில் இவ்வாறான ஒரு கணத்தைப் பதிவுசெய்துகொள்வதற்குச் சிறந்த வழியாக அமைவது

(1) ஒரு நீள் எடுப்பு
(2) ஒரு அண்மை எடுப்பு
(3) ஒரு இடைநிலை அண்மை எடுப்பு
(4) ஒரு இடைநிலை எடுப்பு
(5) மிக அண்மைநிலை எடுப்பு

40. பின்வருவனவற்றைக் கருதுக.

A - ஒரு முகாமைத்துவப் பணியாகும்.
B - நிறுவனத்தின் சுயவிபரத் திரட்டினை விருத்திசெய்யும் பணியாகும்.

மேற்படி கூற்றுகள் தொடர்புபட்டிருப்பது

(1) A - பொதுசனத் தொடர்புகளுடன், B - நிகழ்வு முகாமைத்துவத்துடன்
(2) A - நிகழ்வு முகாமைத்துவத்துடன், B - பொதுசனத் தொடர்புகளுடன்
(3) A மற்றும் B - இரண்டும், பொதுசனத் தொடர்புகளுடன்
(4) A மற்றும் B - இரண்டும், நிகழ்வு முகாமைத்துவத்துடன்
(5) A மற்றும் B - இரண்டும், பொதுசனத் தொடர்புகள், நிகழ்வு முகாமைத்துவம் ஆகிய இரண்டுடனும்

41. ஒரு குறித்த பொருளை விற்கும்போது, விலைக்கழிவு தொடர்பாக ஊடகம் வழியாக பிரசித்தப்படுத்துவது

(1) வியாபார பொதுசனத் தொடர்பு என அழைக்கப்படும்.
(2) அரசாங்க பொதுசனத் தொடர்பு என அழைக்கப்படும்.
(3) தொழில்சார் பொதுசனத் தொடர்பு என அழைக்கப்படும்.
(4) ஊடக பொதுசனத் தொடர்பு என அழைக்கப்படும்.
(5) நிறுவன பொதுசனத் தொடர்பு என அழைக்கப்படும்.

42. படைப்பாக்கத் தொடர்பாடல் பற்றிய சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) கற்பனையாக்கம் படைப்பாக்கப் பணியொன்றை விருத்திசெய்யும் தகைமையாகும்.
(2) சுயமாக ஒன்றை உருவாக்குதல் தொடர் பயிற்சியினால் ஆகும்.
(3) மனதில் புதிய சிந்தனைகளையும் யோசனைகளையும் உருவாக்குவது உள்ளுணர்வு என அழைக்கப்படும்.
(4) இருக்கும் யோசனைகளை ஒருங்குசேர்ப்பது படைப்பாக்கச் சிந்தனை என அழைக்கப்படும்.
(5) ஒரு திறனை விருத்திசெய்யும் தொடர் பயிற்சி வழித்தோன்றுவது எனப்படும்.

43. திரைப்படமொன்றுக்கு "U" சான்றிதழ் வழங்கப்படுவதானது, அத்திரைப்படம்

(1) வயது வந்தோருக்கு மிகப் பொருத்தம் என்பதனாலாகும்.
(2) வயது வந்தோருக்கு மாத்திரம் என்பதனாலாகும்.
(3) எல்லைகளற்ற பொதுமக்கள் திரையிடலுக்கானது என்பதனாலாகும்.
(4) 18 வயதிற்கு மேற்பட்ட எவருக்கும் என்பதனாலாகும்.
(5) 18 வயதிற்குட்பட்ட சிறார்கள் வயது வந்தோரின் துணையுடன் பார்வையிட முடியும் என்பதனாலாகும்.

Department of Examinations - Sri Lanka

- பின்வரும் அட்டவணையை வினாக்கள் **44** மற்றும் **45** ஆகியவற்றுக்கு விடையளிப்பதற்குப் பயன்படுத்துக. கீழுள்ளது, கற்றலில் மாணவர்கள் எவ்வாறு ஈடுபட்டனர் என்பதற்கான ஓர் அட்டவணையாகும்.

	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி
நேரில்	05	12	16	12	10
இணையவழியில்	15	08	04	08	10

44. குறித்த வாரத்தில், நேரிலும் இணையவழியிலும் பங்குபற்றிய மாணவர்களின் இடைப் பெறுமதி முறையே
(1) 05, 04 ஆகும். (2) 55, 45 ஆகும். (3) 12, 08 ஆகும்.
(4) 16, 04 ஆகும். (5) 11, 09 ஆகும்.

45. நேரிலும், இணையவழியிலும் கற்றலில் பங்குபற்றிய மாணவர்களின் ஆகாரப் பெறுமதிகளை எடுத்துக்காட்டும் நாட்கள் முறையே
(1) திங்கள் மற்றும் வியாழன் ஆகும். (2) புதன் மற்றும் திங்கள் ஆகும்.
(3) செவ்வாய் மற்றும் புதன் ஆகும். (4) செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகும்.
(5) புதன் மற்றும் வெள்ளி ஆகும்.

46. பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டவுடன், மீனா தனது முடிவுகளைப் பரீட்சைகள் திணைக்கள இணையத்தளத்திற்குச் சென்று, உள்நுழைவு பெற்று அறிந்தாள். அந்தச் சூழலில் அவளுக்கு உதவிய புதிய ஊடகத்தின் பண்புகள்
(1) வலையமைப்பாதல், அதிவேகச் செய்தியனுப்புகை, தரவுத்தளம்
(2) மீயுரை, அதிவேகச் செய்தியனுப்புகை, தரவுத்தளம்
(3) வலையமைப்பாதல், இடைத்தொடர்பாக்கம், மீயுரை
(4) தானியங்கி, மீயுரை, வலையமைப்பாதல்
(5) இடைத்தொடர்பாக்கம், தானியங்கி, அதிவேகச் செய்தியனுப்புகை

47. ஊடகச் செய்தியொன்றின் சாரத்தைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் பெற்றுக்கொள்ள விமர்சனரீதியிலான பெறுநர் ஒருவரிடம் இருக்க வேண்டிய திறன்
(1) மதிப்பீடு ஆகும். (2) தொகுப்பாக்குதல் ஆகும்.
(3) பகுப்பாய்வு ஆகும். (4) குழுவாக்குதல் ஆகும்.
(5) சாராம்சப்படுத்தல் ஆகும்.

48. பின்வருவன பண்பாடு பற்றிய சில கூற்றுகளாகும்.
A - மானுட வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து இற்றைவரை அது இருந்துவருகின்றது.
B - அது, மேழெந்தவாரியான, எளிமையான மற்றும் பெருந்தொகைத் தயாரிப்புடனான பண்புகளைக் கொண்டிருக்கின்றது.
C - மானுடச் செயற்பாடுகளுடன் வேறுபிரித்தறிய முடியாத இணைப்பை அது கொண்டிருக்கின்றது.
B - தகவல், கருத்தியல், படைப்பாக்கம் மற்றும் தொடர்பாடல் சமூக வகிபங்கினை அது நிகழ்த்துகின்றது.

மேற்படி வரிசைக்கிரமத்தின்படி பண்பாட்டு வகைப்பாடுகளை எதிரொலிக்கும் சிறந்த விடையைத் தெரிவுசெய்க.
(1) பாரம்பரிய, நாட்டார், பிரசித்த, ஊடகப் பண்பாடுகள்
(2) பாரம்பரிய, பிரசித்த, நாட்டார், ஊடகப் பண்பாடுகள்
(3) நாட்டார், பாரம்பரிய, ஊடக, பிரசித்த பண்பாடுகள்
(4) நாட்டார், ஊடக, பாரம்பரிய, பிரசித்த பண்பாடுகள்
(5) ஊடக, பாரம்பரிய, பிரசித்த, நாட்டார் பண்பாடுகள்

Department of Examinations - Sri Lanka

49. பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி வினாவுக்கு விடை எழுதுக.

X	Y
1. சமூக ஊடகம்	A - அதன் விரிவாக்கத்திற்கு குவிகை பங்களிக்கிறது.
2. புதிய ஊடகம்	B - உத்தியோகபூர்வச் செய்திகளை முன்வைக்க இது உதவுகிறது.
3. லிங்க்டின் (LinkedIn)	C - தொழில்சார் வலையமைப்பிற்கு இது உதவுகிறது.
4. ருவிட்டர் (Twitter)	D - புதிய ஊடகத்தின் விருத்தி பெற்ற நிலை இது.

X இற்கும் Y இற்கும் இடையிலான சரியான சோடி சேர்ப்பினை எடுத்துக்காட்டும் விடை எது?

(1) 1D, 2B, 3C, 4A
(2) 1A, 2B, 3D, 4C
(3) 1D, 2A, 3C, 4B
(4) 1B, 2C, 3A, 4D
(5) 1C, 2A, 3D, 4B

50. ஒரு மனிதனுக்கு போஷாக்கு, சுகாதாரம், வசிப்பிடம் மற்றும் மனித உரிமைகள் தேவைகளை நிறைவு செய்ய உதவும் தொடர்பாடல் அடையாளப்படுத்தப்படுவது

(1) சுயநிர்ணயம் என்பதாக ஆகும்.
(2) சமூகப் பங்காற்றுகை வளர்ச்சி என்பதாக ஆகும்.
(3) அபிவிருத்திக்கான தொடர்பாடல் பற்றிய எதிர்பார்ப்புக்கள் என்பதாக ஆகும்.
(4) தேவைகளை மையப்படுத்தல் என்பதாக ஆகும்.
(5) குழல் சமநிலை என்பதாக ஆகும்.

***

Department of Examinations - Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

විෂය අංකය / பாட இலக்கம் **29**

විෂයය / பாடம் **தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය / பத்திரம் I

ප්‍රශ්න අංකය / வினா இல.	පිළිතුරු අංකය / விடை இல.	ප්‍රශ්න අංකය / வினா இல.	පිළිතුරු අංකය / விடை இல.	ප්‍රශ්න අංකය / வினா இல.	පිළිතුරු අංකය / விடை இல.	ප්‍රශ්න අංකය / வினா இல.	පිළිතුරු අංකය / விடை இல.	ප්‍රශ්න අංකය / வினா இல.	පිළිතුරු අංකය / விடை இல.
01.	5	11.	4	21.	5	31.	3	41.	1
02.	1	12.	1	22.	5	32.	4	42.	4
03.	4	13.	2	23.	2	33.	1	43.	3
04.	4	14.	2	24.	1	34.	4	44.	5
05.	3	15.	3	25.	3	35.	3	45.	2
06.	5	16.	2	26.	2	36.	5	46.	1
07.	4	17.	1	27.	5	37.	1	47.	2
08.	3	18.	2	28.	3	38.	3	48.	2
09.	4	19.	5	29.	4	39.	5	49.	3
10.	3	20.	3	30.	2	40.	5	50.	4

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 50 = 50

Department of Examinations - Sri Lanka

தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்

29 - பகுதி II

பகுதி A

1. தொடர்பாடல் ஒரு சமூகச் செயன்முறையாகும்.

(i) பாடசாலைக்குள் முறைசார் தொடர்பாடல் இடம்பெறும் **இரண்டு** சந்தர்ப்பங்களைப் பெயரிடுக.

- வகுப்பறைக் கற்றல் – கற்பித்தல் செயற்பாடு
- காலை நேரக் கூட்டம்
- விழாக்கள் (விளையாட்டு, பரிசளிப்பு, விருது வழங்கல்)
- ஆசிரியர் கூட்டம்
- பெற்றோர் கூட்டம்
- பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம்
- அறிவிப்புப் பலகைகள்
- கருத்தரங்குகள் / கூட்டங்கள் (இலக்கியம், விஞ்ஞானம், ஊடகம்..)
- கண்காட்சிகள் (விஞ்ஞானம், கல்வி..)
- இணைப் பாட விதானச் செயற்பாடுகள் (சாரணர், கடேற், சூழல் பாதுகாப்பு..)
- ஊடகச் செயற்பாடுகள்

02 புள்ளிகள் x 2 = 04 புள்ளிகள்

(ii) ஆளிடைத் தொடர்பாடலின் இயல்புகள் **நான்கினைப்** பெயரிட்டு, அவற்றுள் **இரண்டினைச்** சுருக்கமாக விபரிக்குக.

- இரண்டு நபர்களிடையே நிகழப் பெறுவது.
- உடனடி எதிர்வினை மற்றும் பின்னூட்டம்
- செயற்படு தன்மையுடனான பங்கேற்பு
- வாய்மொழி சார்ந்த மற்றும் வாய்மொழி சாராத் தொடர்புகளுக்கான சந்தர்ப்பங்களும், வாய்மொழி சார்ந்த தொடர்பாடலை வாய்மொழி சாராத் தொடர்பாடல் மூலம் வலுப்படுத்தக்கூடிய வாய்ப்புக்களும்
- தொடர்பாடல் தடைகள் இழிவளவாகும்.
- தொழில்நுட்பச் சாதனங்கள் பயன்படுத்தப்படலாம்.
- நேருக்கு நேராக தொடர்புகளை மேற்கொள்ளல்.
- அனுப்புநர் – பெறுநர் வகிபங்குகள் இடமாற்றிக் கொள்ளப்படக் கூடியன.
- தொடர்பாடலில் ஈடுபடுபவர்களின் உணர்வுகளை கவனத்திற்கொண்டு தொடர்பாடலை மேற்கொள்ள முடியும்.

Department of Examinations - Sri Lanka

- தொடர்பாடலில் ஈடுபடுபவரின் ஆளுமையை இனங்காண முடியும்.
- நேர வரையறையை இழிவளவாக்க முடியும்.
- தூண்டல் மற்றும் தாக்கத்தினை வலுவாக உருவாக்கக் கூடியது.
- இடைத்தொடர்புகளை உறுதிப்படுத்துவதற்கு அடித்தளமாவது.

பெயரிட்டிருந்தால் 01 புள்ளி x 4 = 04 புள்ளிகள்

விபரித்திருந்தால் 02 புள்ளிகள் x 2 = 04 புள்ளிகள்

மொத்தம் = 08 புள்ளிகள்

(iii) வெகுசன ஊடகங்களுக்கும் சமூக ஊடகங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் **மூன்றினை** விபரிக்குக.

வெகுசன ஊடகங்கள்	சமூக ஊடகங்கள்
- இயல்பாக / இலகுவாகப் பயன்படுத்தும் வாய்ப்பு	- பயன்பாட்டிற்கு விசேட அறிவு தேவைப் படுகின்றது (புதிய ஊடகம் பற்றிய அறிவு)
- உரிமையாண்மை உறுதியானது மற்றும் வெளித்தெரிவது	- உரிமையாண்மை சிலநேரங்களில் வெளித் தெரிவதில்லை
- தாமதமான பின்னூட்டம்	- உடனடிப் பின்னூட்டத்திற்கான வாய்ப்பு
- தணிக்கை மேற்கொள்வது இலகுவானது	- தணிக்கை மேற்கொள்வது கடினமாகும்
- ஒழுங்குபடுத்தல் மேற்கொள்வது சாத்தியம்	- ஒழுங்குபடுத்தல் மேற்கொள்வது கடின மாகும்
- புவியியல் வரையறைகள் கொண்டவை	- புவியியல் வரையறைகளைக் கடந்தவை
- தொழில்வாண்மையுடனான ஊடகவிய லாளர்கள் பணியிலிருப்பர்	- சாதாரண பொதுமக்களும் ஊடகச் செயற்பாட்டில் பங்கேற்கக்கூடிய வாய்ப்புகள் காணப்படும்
- தகவல்கள் துரிதமாகப் பகிரப்பட முடியாது.	- ஒப்பீட்டடிப்படையில் தகவல்கள் துரிதமாகக் கொண்டு செல்லப்படுவதுடன், துரிதமாகப் பகிரப்படவும் வாய்ப்பு
- பெறுநர்கள் தமது தெரிவுக்கேற்றவாறு செய்திகளைப் பெற முடியாது.	- பயநர்கள் தமது தெரிவுக்கேற்றவாறு செய்திகளைப் பெற முடியும். (விரும்பிய நேரத்தில், விரும்பிய இடத்தில்)
- தேவைப்படும் தகவல்களை குறித்த காலத்திற்குப் பின்னர் தேடிப் பெற்றுக் கொள்வது கடினம்	- தேவைப்படும் தகவல்களைக் குறித்த காலத்திற்குப் பின்னரும் இலகுவாகத் தேடிப் பெற்றுக்கொள்ள முடியும்.
- செய்திகள் முறைசார்ந்ததாக, அதிகாரபூர்வத் தன்மை கொண்டவையாகக் காணப்படும்	- பெரும்பாலும் செய்திகளுக்கான முறைசார், அதிகாரபூர்வத் தன்மை காணப்படாது
- சமூகக் கலந்துரையாடலுக்கான வாய்ப் புக்கள் குறைவு	- சமூகக் கலந்துரையாடலுக்கான வாய்ப் புக்கள் அதிகம்
- பெறுநர்கள் பெருந்தொகையினராகக் காணப்படுவர்	- பயநர்கள் பரந்தும் சில சமயங்களில் வரையறுக்கப்பட்டும் காணப்படுவர்

04 புள்ளிகள் x 3 = 12 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

(iv) நீங்கள் விரும்பும் வெகுசன ஊடகம் எதையாவது பயன்படுத்தி, தொடர்பாடல் செயன்முறையின் முக்கிய கூறுகள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக.

- மூலம்
- அனுப்புநர் / குறிமுறையாக்குபவர்
- செய்தி
- ஊடகம்
- பெறுநர் / குறிமுறையவிழ்ப்பவர்
- பின்னூட்டம்
- தடைகள் / இடையூறுகள்
- தாக்கம்
- அனுபவக் களம்
- தொடர்பாடல் சந்தர்ப்பம் / சூழல்
- குறிமுறையாக்கம்
- குறிமுறையவிழ்ப்பு

(தெரிவு செய்யப்படும் வெகுசன ஊடகத்தின் அடிப்படையில், அந்த ஊடகத்திற்குரிய மேற்குறிப்பிட்ட கூறுகள் எவையேனும் நான்கு, அந்த ஊடகத்திற்கேயுரிய தகுந்த உதாரணங்களுடன் விளக்கப்பட்டிருக்க வேண்டும்)

04 புள்ளிகள் x 4 = 16 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

2. (i) பிரசித்த பண்பாட்டின் இயல்புகள் **இரண்டினைப்** பெயரிடுக.

- ஊடகச் சந்தையை உருவாக்குவது.
- பெறுநரை வாடிக்கையாளராக மாற்றுவது.
- வாடிக்கையாளர்களைக் கவர்வது.
- வியாபார ஆதிக்கத்தை உருவாக்குவது.
- தேசிய பண்பாடுகளுக்குச் சவாலாக அமைவது.
- இலகுவாக இரசிக்கக் கூடியது.
- புலமை, அழகியல் மற்றும் ஒழுக்கம் இழிவளவானது.
- படைப்புக்களின் தரத்தினை நிர்ணயிக்கும் கருவியாகச் செயற்படுவது.
- பெறுநர்களை ஊடக ஆதிக்கத்திற்குள் சிக்கவைப்பது.
- பெருமளவு எண்ணிக்கையிலான படைப்புக்களை உருவாக்குவது.
- வெகுஜன ஊடகங்களின் வழியாகப் பல்கிப்பெருகுவது.
- மூட நம்பிக்கைகளை அல்லது பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துக்களைப் பிரபல்யப்படுத்துவது.
- தொழினுட்பத்துடன் இணைந்திருப்பது.
- கணத்துக்கு கணம் மாற்றங்களைச் சந்திப்பது.
- ஊடகங்கள் வழி வியாபித்துக் கொள்வது.

02 புள்ளிகள் x 2 = 04 புள்ளிகள்

(ii) ஊடக விளங்கறிவு ஏன் தேவையானது என்பதை, **இரண்டு** காரணங்களைத் தந்து சுருக்கமாக விபரிக்குக.

- பல்வேறு ஊடகச் செய்திகளையும் பெற்றுக்கொள்வதற்கான விருப்பம் / ஆர்வம் மக்களிடம் அதிகரிப்பது.
- உள நடத்தைகளை கட்டுப்படுத்தும் ஆற்றலைத் தருவது.
- பல்வேறுபட்ட ஊடகச் செய்திகளை விமர்சனரீதியாகப் புரிந்துக் கொள்ளும் ஆற்றலைத் தருவது.
- ஊடகச் செய்திகளை சரியாகப் புரிந்து கொள்ளும் திறனைத் தருவது.
- ஊடக நடத்தைகளைப் புரிந்துகொள்ள உதவுவது.
- ஊடகச் செயன்முறைகளைப் புரிந்து கொள்ளும் திறனைத் தருவது.
- ஊடகச் செய்திகளின் உள்ளார்த்தங்களைத் தெரிந்துகொள்ள உதவுவது.
- ஊடகங்களின் நிகழ்ச்சி நிரலைப் புரிந்துக் கொள்ளும் திறனைத் தருவது.
- ஊடகச் செய்திகளில் உள்ளடங்கியிருக்கும் விடயங்களை வெளிப்படையாக அடையாளப்படுத்த உதவுவது.
- ஊடகச் செய்திகளின் படைப்பாக்கத்தினைப் புரிந்து கொள்ள முடியுமாக அமைவது.
- ஊடக உரிமையாண்மையின் செல்வாக்கினை / தாக்கத்தினை அறிந்துகொள்ள முடிதல்.
- ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைத் தரக்கூடியதாவது.
- அன்றாட வாழ்க்கையை யதார்த்தமாக முன்னெடுக்க உதவக் கூடுமாக இருப்பது.

(காரணங்களைப் பெயரிட்டால் ஒன்றுக்கு 01 புள்ளி வீதம் 02 புள்ளிகளும், விபரிப்புக்கு தலா மூன்று புள்ளிகள் வீதம் 06 புள்ளிகளும் வழங்குக.) **(08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

(iii) ஷ்ராம் - ஒஸ்கூட் மாதிரியின் **மூன்று** முக்கிய இயல்புகளைத் தனித்தனியாக விளக்குக.

- செய்தி
- குறிமுறையாக்கம்
- குறிமுறையவிழ்ப்பு
- பொருட்கோடல்

(மேலுள்ளவற்றில் எவையேனும் மூன்றினைத் தனித்தனியாக விளக்கியிருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகள் வழங்குக.)

04 புள்ளிகள் x 3 = 12 புள்ளிகள்

(iv) புதிய நூலக நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பிக்க உங்களது பாடசாலை திட்டமிடுகிறது. இந்தத் திட்டத்தை பிரசித்தப்படுத்தப் பயன்படக்கூடுமான நாட்டார் அம்சங்கள் **நான்கினைப்** பெயரிட்டு, அவற்றுள் **இரண்டு** மேற்படியாக எவ்வாறு பயன்படுத்தப்பட முடியும் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

- நாட்டார் பாடல்கள்
- நாட்டார் கதைகள்
- நாட்டார் நாடகங்கள் (கூத்துக்கள்)
- நாட்டார் விளையாட்டுக்கள்
- நாட்டார் நடனங்கள் / ஆட்டங்கள்
- நாட்டார் இசை
- நாட்டார் சடங்கு நிகழ்த்துகைகள்

(நிகழ்ச்சித் திட்டத்தைப் பிரசித்தப்படுத்த மேலுள்ளவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை உதாரணங்களுடன் விளக்கியிருக்க வேண்டும்.)
(கருப்பொருள் உருவாக்கம், பிரசித்தப்படுத்துவதற்கு எவ்வாறு பயன்படுத்துவது?, அதனால் நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளை எய்துவது எவ்வாறு?, கருப்பொருள் மக்களைக் கவரும்வகையில் முன்வைப்பது எவ்வாறு?)

பெயரிட்டிருந்தால்	**01 புள்ளி**	**x 4 = 04 புள்ளிகள்**
உதாரணங்கள் தரப்பட்டிருந்தால்	**02 புள்ளிகள்**	**x 2 = 04 புள்ளிகள்**
விளக்கியிருந்தால்	**04 புள்ளிகள்**	**x 2 = 08 புள்ளிகள்**

மொத்தம் = 16 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

3. தொடர்பாடல் செயன்முறையை அடையாளங்காண்பது பெறுநரின் திறனாற்றல் ஆகும்.

(i) கிராமிய அபிவிருத்திக்குப் பயன்படக் கூடிய வானொலி நிகழ்ச்சி வடிவங்கள் **நான்கினைப்** பெயரிடுக.

- வானொலி நாடகங்கள்
- கலந்துரையாடல் நிகழ்ச்சிகள்
- வானொலி விவரண நிகழ்ச்சிகள் (Radio Documentaries)
- வானொலி சம்பாஷணை நிகழ்ச்சிகள்
- வானொலி சஞ்சிகை நிகழ்ச்சிகள்
- வானொலி விவரணச் சித்திரங்கள் (Radio Features)
- இசை நிகழ்ச்சிகள்
- செய்திகள்
- அறிவிப்புக்கள் (Spot Announcements)
- விளம்பரங்கள்

01 புள்ளி x 4 = 04 புள்ளிகள்

(ii) தற்கால வெகுசன ஊடகங்களில் பயன்படும் **இரண்டு** தணிக்கை முறைகளை விபரிக்குக.

- விளம்பரங்கள் அளிப்பதைக் கட்டுப்படுத்துதல்.
- உரிமங்கள் விநியோகம் வழியான கட்டுப்படுத்துதல் / உரிமங்களை இரத்துச் செய்தல் / உரிமங்களை அடுத்தவர்களிடம் பாரப்படுத்துதல்.
- சட்டங்கள் / சட்ட மூலங்கள் / வரி அறவீடுகள்
- தகைமை வாய்ந்த / தன்னாட்சி அதிகாரியை நியமித்தல்.
- பரிசுகள் வழங்குதல் / விருந்துபசாரங்களை ஒழுங்கமைத்தல்.
- தண்டனைகள் வழங்குதல்.
- தண்டப்பணம் விதித்தல்.
- ஊடக நிறுவனங்களுக்கு தீங்கிழைத்தல் / சேதம் விளைவித்தல்.
- அதிகாரப் பொறுப்புகளை மாற்றியமைத்தல்.
- தடை செய்தல்.
- ஊடகவியலாளர்களை மிரட்டுதல் / தாக்குதல் / உயிராபத்தை ஏற்படுத்துதல்.
- ஊடக ஒழுக்கநெறிகள்
- ஊடக சுய கட்டுப்பாடுகள்
- வெளிப்படையாகப் பெயர் கூறும் அறிவிப்புகள் (Name calling)

(விபரித்திருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகள் வழங்குக.)

04 புள்ளிகள் x 2 = 08 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

(iii) ஊடகப் பண்பாட்டினால் உருவாக்கப்படும் புதிய சமூகத் தேவைகளின் நன்மை மற்றும் தீமையான விளைவுகள் இரண்டு வீதம் தனித்தனியாக விபரிக்குக.

நன்மைகள்

- புதிய வாழ்வியல் உருவாதல்.
- புதிய ஊடக மாதிரிகள் உருவாக்கப்படுதல்.
- சமூகம் நவீனமயமாதல்.
- படைப்பாக்கங்கள் விருத்தி பெறுதல்.
- பூகோளப் பண்பாட்டுடன் இணைவதற்கான சந்தர்ப்பம்.
- புதிய பண்பாட்டு அம்சங்களின் இணைப்பு.
- புதிய தொழினுட்பங்களின் விருத்தி.
- உரிய காலத்தேவைகளின் பேரில் கரிசனை.

தீமைகள்

- சமூக தொடர்பாடல் மற்றும் இணைப்புக்கள் இழிவளவாதல்.
- நுகர்வு மிகையாகும் / அதிகரிக்கும் போக்கிற்கு ஆட்படுதல்.
- செயற்கையான / போலியான தேவைகள் உருவாகுதல்.
- மானுடத் தொடர்புகள் / உறவுகள் செயற்கைத் தன்மை பெறுதல்.
- அனைத்துச் சமூக விடயங்களும் ஊடக வெளிச்சத்துக்கு ஆட்படுதல்.
- சமூக விழுமியங்கள், சிந்தனைகள், உணர்வுகள், புலமை போன்றவை சந்தைத் தேவைக்கேற்ப மாற்றமடைதல்.
- பண்பாட்டு அதிர்வும் பண்பாட்டு மேலாதிக்கமும்.
- சமூகப் பண்பாட்டுப் பல்வகைமை இழிவளவாகுதல்.

நன்மைகள் குறிப்பிடப்பட்டிருந்தால் **03** புள்ளிகள் x **2** = **06** புள்ளிகள்

தீமைகள் குறிப்பிடப்பட்டிருந்தால் **03** புள்ளிகள் x **2** = **06** புள்ளிகள

மொத்தம் = 12 புள்ளிகள்

(iv) அனர்த்த நிலைமைகளில், ஊடகங்கள் எவ்விதம் அவசியம் செயற்பட வேண்டும் என்பதைப் பின்வரும் வழிகாட்டல்களைப் பயன்படுத்தி, உதாரணங்களுடன் விளக்குக.

* தகவற் செயற்பாடு
* கல்விச் செயற்பாடு
* தூண்டற் செயற்பாடு
* சமூக அமைப்புச் செயற்பாடு

[redacted]

தகவல் செயற்பாடு

- உடனடியாக / துரிதமாகத் தகவல்களை வழங்குதல்.
- அதிகாரபூர்வ மூலங்களிடமிருந்து தகவல்களைப் பெற்று வழங்குவது.
- மிகை உணர்திறனான, உணர்ச்சிகரமான, உணர்வுகளைத் தூண்டும் தகவல்கள் வழங்கப்படுவதைத் தவிர்த்தல்.
- நிகழ்பவற்றைத் தொடர்ந்து பதிவு செய்தல்.

Department of Examinations - Sri Lanka

- எதிர்வரக்கூடிய நிலையை உரிய மூலங்களின் பேரில் கணித்து அறிவிப்பது.
- சமநிலைத் தன்மையுடன் தகவல்களை வழங்குதல்.

கல்விச் செயற்பாடு

- அனர்த்தத்தின் பாதிப்பினை எவ்வாறு இழிவளவாக்குவது என்பதைத் தெளிவுபடுத்துதல்.
- அனர்த்தத்தின் தன்மையைத் தெளிவுபடுத்தல்.
- அனர்த்த நிலமைகளிலிருந்து தற்பாதுகாத்துக் கொள்வதற்குரிய வழிமுறைகள் தொடர்பில் அறிவுரைத்தல்.
- ஏற்படக்கூடிய பின்விளைவுகளிலிருந்து பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதற்கு அறிவுரைத்தல்.
- இழந்து போகும் கல்வி வாய்ப்புக்களை மீட்டெடுப்பதற்கு உதவுதல்.

நூண்டற் செயற்பாடு

- பொதுமக்கள் மத்தியில் நல் விளைவுகளை அடையக்கூடிய நடத்தைகளை ஊக்குவித்தல்.
- இழக்கப்பட்ட உணர்வுகளை மீள உருவாக்குதல்.
- அடுத்தவருக்கு உதவும் வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- அனர்த்தங்களைச் சந்தித்தவர்கள் மீது உரிய அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்தல்.

சமூக அமைப்புச் செயற்பாடு

- அந்நியோன்யமான ஒத்துழைப்பினை உருவாக்குதல்.
- மக்கள் உரையாடலுக்குரிய வெளியை உருவாக்குதல்.
- தேவைகளின் பேரில் செயற்படக் கூடிய நிலையைச் சமூகத்தில் உருவாக்குதல்.
- நீண்டகால இலக்குகளின் அடிப்படையில் சமூகம் செயற்படுத்துவதற்கான உத்திகளை முன்வைத்தல்.
- நலனோம்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் முன்னெடுத்தலும்.

(உதாரணங்களுடன் விபரித்திருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக.)

உதாரணங்களுக்கு	02 புள்ளிகள் X 4 = 08 புள்ளிகள்
விளக்கியிருந்தால்	02 புள்ளிகள் X 4 = 08 புள்ளிகள்
மொத்தம்	= 16 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

4. மொழிக்கும் வெகுசன ஊடகங்களுக்கும் இடையே நெருங்கிய உறவு காணப்படுகிறது.

(i) வாழும் மொழியொன்றுக்குரிய **நான்கு** பண்புகளை எழுதுக.

- இன்றும் தொடர்பாடல் வழக்கிலுள்ள மொழி.
- தொடர்ந்தும் பயன்படுத்துவதால் ஊட்டம் பெறுவதுடன் மாற்றமும் பெறுகிறது.
- தனித்துவமான அடையாளங்களைக் கொண்டிருக்கும்.
- சொற்களின் கருத்து பயன்பாட்டிற்கேற்ப வேறுபடும்.
- தொடர்ந்தும் பயன்பாட்டில் காணப்படும்.
- வார்த்தைகளுக்கு புதிய அர்த்தங்கள் கிடைக்கப் பெறும்.
- குறித்த சமூகம் அந்த மொழியை இலகுவாக அடையாளம் கண்டு கொள்ளும்.
- சிந்தனைகளைப் படைப்பாக்கத்துடன் வெளிப்படுத்த முடியும்.

01 புள்ளி x 4 = 04 புள்ளிகள்

(ii) ஊடக அறிக்கையொன்றைத் (press release) தயாரிக்கும்போது, கவனத்திற்கொள்ள வேண்டிய **இரண்டு** அம்சங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

- தேவையான அடிப்படைத் தகவல்களைத் திரட்டிக் கொள்ள வேண்டும்.
- குறித்த அறிக்கை தொடர்பான இலக்குகள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.
- தேவையான தகவல்கள் அவதானத்துடன் சேகரிக்கப்பட வேண்டும்.
- சேகரிக்கப்பட்ட தகவல்கள் பொருத்தமாகவும் படைப்பாக்கத்துடன் தொகுக்கப்பட வேண்டும்.
- வெவ்வேறு ஊடகங்களுக்கும் ஏற்ற வகையில் ஊடக அறிக்கையானது தயாரிக்கப்பட வேண்டும்.
- உரிய அதிகாரமளிக்கப்பட்டவரின் கையொப்பம் அறிக்கையில் பெறப்பட வேண்டும்.

04 புள்ளிகள் x 2 = 08 புள்ளிகள்

(iii) பிரதான மொழியொன்றிலிருந்து துணைமொழி வேறுபடும் **மூன்று** இயல்புகளை விளக்குக.

- துணை மொழி, குறித்த துணைச் சமூகப் பண்பாட்டின் இயல்புகளைக் கொண்டது.
- பிராந்திய / பிரதேச அடையாளங்கள் துணை மொழியில் எதிரொலிக்கும்.
- தொழில் மற்றும் சூழலின் அடையாளங்களைத் துணைமொழி கொண்டிருக்கும்.
- குறித்த துணைச் சமூகத்தினரால் மாத்திரம் பயன்படுத்தப்படுவதாக அது அமையும்.
- ஒப்பீட்டு ரீதியில் மாற்றங்கள் மெதுவாகவே துணை மொழியில் நிகழும்.
- ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழிக் கட்டமைப்பினை விலகியிருக்கும்.

04 புள்ளிகள் x 3 = 12 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

(iv) வரலாற்றுரீதியான ஊடக விமர்சனப் பிரவேசத்தின் நான்கு பண்புகளைத் தொலைக்காட்சித் தொடர்களிலிருந்தான உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக.

- தொலைக்காட்சித் தொடரின் வரலாற்றுத் தகவல்களும் பின்னணியும் துல்லியமானதாக அமைய வேண்டும்.
- வாழ்க்கைப் பாத்திரங்கள், வரலாற்றுச் சம்பவங்கள், கால யுகத்தின் மாற்றங்கள், ஆளுமைகள், தரவுகள், காலங்கள் விமர்சிக்கப்படும்.
- வரலாற்று நிகழ்வுகள் நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை நோக்காகக் கொண்டும் வரைவிலக்கணப் படுத்தப்படலாம்.
- வரலாற்று நிகழ்வுகள் புதிய பரிமாணங்களிலும் நோக்கப்பட முடியும்.
- வரலாற்றுச் சம்பவங்கள் போலியாக முன்வைக்கப்படலாகாது.
- வரலாற்றுச் சம்பவங்கள் குறித்து படைப்பாளிகள் முன்வைக்கும் படைப்புக்கள் குறித்து விமர்சகர்களினால் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- பார்வையாளரின் வரலாறு குறித்த அறிவை வளர்ப்பதற்காக அமைய வேண்டும்.

(தொலைக்காட்சித் தொடர் பற்றிய உதாரணங்களுடன் விளக்கம் தரப்பட வேண்டும். வெறுமனே குறிப்புக்களை மாத்திரம் தருவதாக விடை இருந்தால், புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

உதாரணங்களுக்கு 02 புள்ளிகள் x 04 = 08 புள்ளிகள்
விளக்கியிருந்தால் 02 புள்ளிகள் x 04 = 08 புள்ளிகள்

மொத்தம் = 16 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

5. படைப்பாக்கச் சிந்தனையும் சகவாழ்வும் சமூக விருத்திக்கு முக்கியமானவையாகும்.

(i) ஊடக விமர்சகர் ஒருவருக்கு இருக்கவேண்டிய **இரண்டு** பண்புகளைப் பெயரிடுக.

- ஊடக விளங்கறிவைக் கொண்டிருத்தல்.
- ஊடக விமர்சன / திறனாய்வு பற்றிய கோட்பாடுகள் / பிரவேசங்கள் தொடர்பான அறிவைக் கொண்டிருத்தல்.
- ஊடகச் செய்திகள் கொண்டிருக்கும் உள்ளார்த்தங்களை அடையாளங்காணும் திறனைக் கொண்டிருத்தல்.
- ஊடகச் செய்திகளின் தாக்கங்களை விருப்பு வெறுப்பின்றி முன்வைக்கக் கூடியவராயிருத்தல்.
- ஊடகத் தொழிற்துறையின் இருப்பிற்கு ஒத்தாசைகள் புரிதல்.
- ஊடகப் பெறுநர்களின் புரிதலை விருத்தி பெறச் செய்பவராயிருத்தல்.
- முதிர்ச்சி பெற்ற, பூரணத்துவமான அறிவைக் கொண்டிருத்தல்.
- பரந்த நோக்கினைக் கொண்டிருத்தல்.
- ஊடகப் பயன்பாடு பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் கொண்டிருப்பவராயிருத்தல்.

02 புள்ளிகள் x 2 = 04 புள்ளிகள்

(ii) ஊடக வன்முறை உள்ளக அமைதியைப் பாதிக்கும் **இரண்டு** வழிகளைச் சுருக்கமாக விபரிக்குக.

- குடும்பத்திற்குள் வன்முறை ரீதியான மனநிலையைத் தோற்றுவித்தல்.
- குடும்பச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு ஊடகங்களில் வெளிப்படுத்தப்படும் வன்முறையைப் பயன்படுத்தல்.
- மானுட உரிமைகளும் விழுமியங்களும் மீறப்படுதல்.
- உள்ளக அமைதி சீரற்றுப் போதல்.
- அடுத்தவருக்குத் தீங்கிழைக்கும் வகையில் செயற்படுதல்.
- வன்முறை பொதுமைப்படுத்தப்படுதல் / வழக்கத்திற்கானதாகுதல்.
- சுயநலத்துடன் செயற்படுதல்.
- குடும்ப உறுப்பினர்கள் வகைப்பொறுப்பின்றிச் செயற்படுதல்.

04 புள்ளிகள் x 2 = 08 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

(iii) தொலைக்காட்சிகளை நோக்கிப் பார்வையாளர்களைக் கவர வைப்பதற்காக ஊடக வன்முறையைப் பயன்படுத்தும் நிகழ்ச்சி வகைகள் **மூன்றினை** விளக்குக.

- செய்தி நிகழ்ச்சிகள்
- கார்ட்டூன் நிகழ்ச்சிகள்
- தொலைக்காட்சித் திரைப்படங்கள் (Tele films)
- தொலைக்காட்சித் தொடர்கள் (Tele serials)
- மெய்மை நிகழ்ச்சிகள் (Reality shows)
- வன்முறை ரீதியான விளையாட்டு நிகழ்ச்சிகள்
- விவரணப் படங்கள் (குற்றக் கதைகள் – Crime stories)
- சம்பாஷணை நிகழ்ச்சிகள் (Talk shows)
- தொலைக்காட்சி விளம்பரங்கள்

(மூன்று தொலைக்காட்சி நிகழ்ச்சி வகைகளும் வெவ்வேறு நிகழ்ச்சி வடிவங்களைப் பிரதிநிதித்துவப் படுவதாக அமைய வேண்டும்.)

04 புள்ளிகள் x 3 = 12 புள்ளிகள்

(iv) அபிவிருத்தி பற்றிய எவரெட் எம். ரோஜர்ஸின் பின்வரும் சிந்தனைகளைத் தற்கால உதாரணங்களுடன் ஆராய்க.

(a) புத்தாக்கங்களின் பரவல்

(b) தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயாரித்தல்

புத்தாக்கங்களின் பரவல்

- புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் உற்பத்திகளைப் பிரசித்தப்படுத்தல்.
- கைவசமிருக்கும் சிந்தனை, உற்பத்தி, நடத்தைகள் சார்ந்த தொழினுட்பங்களை புதிய பயன்பாட்டிற்காகப் பிரயோகிக்கும் நுட்பமே புத்தாக்கங்களின் பரவல் எனப்படும்.

  உதாரணம்: கொரோனா வைரஸிற்கான பல்வேறு மருந்துகளை அறிமுகம் செய்தல்.
  புதிய சுகாதார வழிமுறைகளை அறிமுகம் செய்தல்.

தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்

- நாட்டின் தேவையைப் பூரணப்படுத்தும் வகையில், அந்த இலக்கினை மையப்படுத்தியதாக தேசிய வளங்களை ஒருமுகப்படுத்தி உருவாக்கப்படும் திட்டம் தேசிய நிகழ்ச்சித் திட்டம் எனப்படும்.

  தற்கால உதாரணங்கள் தரக்கூடிய சில துறைகள்:

  1. விவசாயம் (Agriculture)
  2. இணையத் தொடர்பு (Internet connection)
  3. மருத்துவம் (Medicine)
  4. நிர்மாண அமைப்புக்கள் (Constructions)

உதாரணங்களுக்கு 04 புள்ளிகள் x 02 = 08 புள்ளிகள்

ஆராய்ந்திருந்தால் 04 புள்ளிகள் x 02 = 08 புள்ளிகள்

மொத்தம் = 16 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

6. ஊடக விளங்கறிவு பல்வேறு திறன்களின் ஒருங்குசேர்க்கையாகும்.

(i) ஊடகக் கல்வி வழங்கப்படுவதன் நோக்கங்கள் **இரண்டினை** எழுதுக.

- ஒவ்வொரு / வெவ்வேறு பாடங்களுக்கிடையே (Inter-Disciplinary and Multi-Disciplinary) பரஸ்பரத் தொடர்பை உருவாக்குவதாக அமையும்.
- மாணவர்களின் பங்கேற்பினை மையமாகக் கொண்ட கற்றற் சூழலை உருவாக்கும்.
- மாணவர்களைச் சமூகமயப்படுத்துவதற்கு உதவும்.
- உலகத்தை வகுப்பறைக்குள் கொண்டு வருவதற்கு வழி தரும்.
- ஊடக விமர்சனத்தை / திறனாய்வை ஊக்குவிப்பதற்கு உதவும்.
- தொடர்பாடல் திறனை விருத்தி செய்யும்.
- ஊடக விளங்கறிவிற்கு உதவும்.
- படைப்பாக்கபூர்வ தொடர்பாடல் திறனை விருத்தி செய்யும்.
- விமர்சன ரீதியாக ஊடகங்களைப் பயன்படுத்தும் ஆற்றலைத் தரும்.
- வேறுபட்ட சூழல்களுக்குப் பொருத்தமாக மொழியைப் பயன்படுத்தும் திறன்.
- ஊடகம் மற்றும் பண்பாடு பற்றிய புரிதலைத் தரும்.
- ஊடகத்தின் வழியான தனிப்பட்ட / சமூகப் பாதிப்புக்களை அடையாளங்காண உதவும்.
- தகவல்களைக் கையாளும் / பயன்படுத்தும் திறனைத் தரும்.
- ஊடக ஒழுக்க நெறிகள் மற்றும் நியமங்கள் தொடர்பான புரிதலை உருவாக்கும்.
- சிறந்த பிரஜையாக அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செல்வதற்கு உதவும்.
- ஊடகத்தைக் கற்றல் – கற்பித்தல் ஊடகமாகப் பயன்படுத்தக் கூடுமான திறனாற்றலைத் தரும்.

02 புள்ளிகள் x 2 = 04 புள்ளிகள்

(ii) படைப்பாக்க நடிப்பு மற்றும் படைப்பாக்கப் பேச்சு ஆகியவற்றைச் சுருக்கமாக விபரிக்குக.

படைப்பாக்க நடிப்பு

- பல்வேறுபட்ட விடயங்களை அழகியலுடன் நடிப்பினூடாக / ஆற்றுகையினூடாக வெளிப்படுத்தல்.
- மொழி தொடர்பில் பரிச்சயம் (எழுத்து மற்றும் வாசிப்பு) இல்லாவிடினும் பங்கேற்பதற்கான வாய்ப்பு.
- சமூகத் தொடர்பாடல் / தொடர்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவும்.
- புத்தாக்கத்திற்கான உள்ளுணர்வை விருத்தி செய்வதற்கு உதவும்.
- நடிப்பில் பல்வேறு சம்பிரதாயங்கள் உள்ளன: யதார்த்த, உரை நடை சார்ந்த, விகார ரூபமுடைய (முறையான வடிவமற்ற), உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தும் முறைகள்.
- நடிப்பில் நான்கு அபிநயங்கள் பயன்படுத்துகின்றன: ஆங்கீக அபிநயம் (உடல்மொழி), சாத்வீக அபிநயம் (முக பாவனை), ஆகார்ய அபிநயம் (ஆடை அணிகலன்), வாச்சீக அபிநயம் (குரல் மற்றும் மொழி)
- நடிப்பில் குறியீட்டு வெளிப்பாடுகள் / அர்த்தங்கள் சூழல் சார்ந்து அமையும்.

Department of Examinations - Sri Lanka

படைப்பாக்கப் பேச்சு

- முன்னெப்போதுமற்ற / புதிதான வார்த்தைகளை மற்றும் சிந்தனைகள வெளிப்படுத்துதல்.
- பல்வேறு வகைகளில் பேச்சு முன்வைப்புக்கள் நிகழ்த்தப்பட முடியும்.
- மொழியைப் படைப்பாக்கபூர்வமாகக் கையாள்தல் / பயன்படுத்துதல்.
- மொழியைப் பொருத்தமாகப் பயன்படுத்துதல்
- பல்வேறு மொழித்துணை இயல்புகளைப் (Para - language) பயன்படுத்துதல்.
- மிகத் தெளிவான, துல்லியமான வகையில் (குழப்பங்களற்ற) மொழியைப் பயன்படுத்துதல்.
- பெறுநரை மையப்படுத்திய முன்வைப்பு.
- கோபமூட்டக்கூடிய, வன்முறைகளைத் தூண்டக்கூடிய முன்வைப்பாக அமையாதது.

04 புள்ளிகள் x 2 = 08 புள்ளிகள்

(iii) ஊடக விளங்கறிவு கொண்டுள்ள திறன்கள் **மூன்றினை** விபரிக்குக.

- உபயோகிக்கும் திறன்
- பகுப்பாய்வு செய்யும் திறன்
- மதிப்பீடு செய்யும் திறன்
- படைப்பதற்கான / நிர்மாணிக்கும் திறன்.

(ஒவ்வொரு விடயத்திற்கும் இரண்டு குறிப்புக்கள் விபரிக்கப்பட்டிருக்க வேண்டும்)

04 புள்ளிகள் x 3 = 12 புள்ளிகள்

(iv) படைப்பாக்கச் செய்தியொன்றை முன்வைப்பது தொடர்பில் கவனிக்கவேண்டிய **நான்கு** அம்சங்களை விளக்குக.

- பெறுநரின் விளங்கறிவுக்கு ஏற்றதாக / பெறுநரை மையமாகக் கொண்ட செய்தி முன்வைப்பு.
- பெறுநரின் நிலைநோக்கிற்கு ஏற்றவாறான செய்தி முன்வைப்பு.
- பொருத்தமான, பரிச்சயமான முன்வைப்பு மாதிரிகளைப் பயன்படுத்துதல்.
- பெறுநரின் அனுபவத்துடன் பரிச்சயமானதாக அமைவது.
- செய்திக்கும், பெறுநருக்கும் இசைவான / பொருத்தமான ஊடகத்தைத் தேர்வு செய்தல்.
- நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையிலான செய்தி முன்வைப்பு.
- உள ரீதியில் மலர்ச்சியை ஏற்படுத்துவதான செய்தி முன்வைப்பு.
- செய்திகளின் அர்த்தம் அனைவரையும் சமனாகச் சென்றடையக் கூடியதாக அமையும்.
- பெறுநரின் இரசனைக்குத் தக்கதாக அமையும்.

04 புள்ளிகள் x 4 = 16 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

7. புதிய நூற்றாண்டின் சிறார்கள் பாரம்பரிய ஊடகங்கள், புதிய ஊடகங்கள் என இரண்டையும் சமநிலையாகப் பயன்படுத்தக் கூடியவாறு அவர்களுக்குக் கல்வியூட்டுவது முக்கியமானதென பாடசாலை வைபவத்தில் பிரதம விருந்தினர் தெரிவித்தார்.

(i) வரலாற்றுக்கு முந்தைய கால கட்டத்தில் பாரம்பரியத் தொடர்பாடலில் பயன்படுத்தப்பட்ட காட்சிக் குறியீடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

- குகை ஓவியங்கள்
- குறியீடுகள்
- தீ
- புகை
- இலை குழைகளைத் தொங்கவிடுதல்
- வர்ணங்களைப் பயன்படுத்துதல்.

01 புள்ளி x 4 = 04 புள்ளிகள்

(ii) வாய்மொழித் தொடர்பாடலின் **இரண்டு** இயல்புகளைச் சுருக்கமாக விபரிக்குக.

- சொற்களினூடாகச் செய்யும் தொடர்பாடல்
- மொழியை அறிந்திருப்பது அவசியம்.
- மொழி தொடர்பான தேர்ச்சி அவசியமற்றது.
- தொடர்பாடலில் பங்கேற்கும் இருதரப்பும் மொழியை அறிந்திருக்க வேண்டும்.
- முன்னாயத்தம் தொடர்பாடல் மேலும் வலுவடைய உதவும்.
- பொறுப்புடமையுடன் மொழியைப் பயன்படுத்துதல்.
- அனுப்புநருக்குத் தெரிந்த மொழி அல்லாது பெறுநருக்குப் புரியும் மொழியில் தொடர்பாடல் மேற்கொள்ளல்.
- இலக்கண அடிப்படை இல்லாமலும் தொடர்பாடல் இடம்பெற முடியும்.
- தொடர்பாடல் மீளப் பெற முடியாதது (Irreversible).

04 புள்ளிகள் x 2 = 08 புள்ளிகள்

(iii) பாரம்பரிய ஊடகங்களில் பயன்படுத்தப்படும் விசேட பண்புகள் **மூன்றினை** உதாரணங்களுடன் விளக்குக.

- நம்பகத்தன்மை.
- பரிச்சயமான குறியீடுகள்.
- மக்களின் ஆழமான புலனுணர்வுடன் இணைந்தது.
- பெறுநரின் செயற்படு பங்கேற்பு பெற்றுக் கொள்ளப்பட முடியுமாக அமைவது.
- பண்பாட்டு அடையாளம்.
- தலைமுறை தலைமுறை வழியாக முன்னெடுக்கப்படுவது.

Department of Examinations - Sri Lanka

- மக்கள் தளத்தை அடிப்படையாகக் கொண்டது.
- எளிமையான கட்டமைப்பு.
- கருப்பொருள் அடிப்படையிலானது (Thematic content).
- தளர்வுகள் கொண்டது / நெகிழ்வானது.
- செலவுகள் இழிவளவானது.

உதாரணங்களுக்கு 01 புள்ளி x 03 = 03 புள்ளிகள்
விளக்கியிருந்தால் 03 புள்ளிகள் x 03 = 09 புள்ளிகள்
மொத்தம் = 12 புள்ளிகள்

(iv) புதிய ஊடகத்தில் பயன்படும் மொழியினால், தேசிய மொழிகள் எவ்வாறு சவால்களுக்கு ஆட்படுகின்றன என்பதைப் பின்வரும் அம்சங்களைப் பயன்படுத்தி, உதாரணங்களுடன் விபரிக்குக.

* சுருக்கமான பதங்கள்
* கலப்பு மொழி
* தவறான மொழிப்பாவனை
* ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி, சொந்த மொழிகளை எழுதுதல்

சுருக்கமான பதங்கள்

- 4U , Cls , GM , GB

கலப்பு மொழி

- தமிழ், சிங்கள மொழிகளை கலந்து பயன்படுத்தல்
- தமிழ், ஆங்கில மொழிகளை கலந்து பயன்படுத்தல்
- ஆங்கில, சிங்கள மொழிகளை கலந்து பயன்படுத்தல்

தவறான மொழிப்பாவனை

- மொழியின் ஏற்புடைமையைப் புறக்கணித்தல்
- இலக்கண விதிமுறைகள் காணப்படாமை
- ஸ்டிகர், இமோஜி பயன்படுத்தல்

ஆங்கில எழுத்துக்கள் பயன்படுத்தி சொந்த மொழியை எழுதுதல்

- SMS, MMS
- 'Naan weeta poran'

(ஒவ்வொரு அம்சத்திற்கும் ஆகக் குறைந்தது ஒரு உதாரணமாவது தரப்பட்டிருக்க வேண்டும்.)

உதாரணங்களுக்கு 01 புள்ளி x 04 = 04 புள்ளிகள்
விளக்கியிருந்தால் 03 புள்ளிகள் x 04 = 12 புள்ளிகள்
மொத்தம் = 16 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

8. எதிர்வரவுள்ள தனது ஓவியக் கண்காட்சி பற்றி செய்திப்பத்திரிகை ஒன்றுக்கு நேர்காணல் வழங்கிய அகிலன், தனது கண்காட்சிக்கான அனுசரணையாளர் ஒருவருக்காகத் தான் காத்திருப்பதாகக் கூறினார்.

(i) லியனார்டோ டாவின்சியினால் குறிப்பிடப்பட்ட படைப்பாக்கத்திற்கான காரணிகளில் **நான்கினைப்** பெயரிடுக.

- ஆர்வம்
- நிரூபணம்
- பரபரப்பானது
- மென்மை
- கலை மற்றும் விஞ்ஞானத்தின் சமநிலை
- உடல் – உளச் சமநிலை
- தொடர்பு

01 புள்ளி x 04 = 04 புள்ளிகள்

(ii) வியாபார பொதுசனத் தொடர்பின் வழியாகத் தனது நற்பெயரை விருத்தி செய்வதற்காக நிறுவனமொன்று பயன்படுத்தும் **இரண்டு** உபாயங்களைச் சுருக்கமாக விவரிக்குக.

- வியாபாரக் கழிவு வழங்கல்
- வளர்ச்சிக்காக விசேட செயற்றிட்டங்களை மேற்கொள்ளல்.
- நிறுவன சமூகப் பொறுப்புணர்வு (CSR) செயற்திட்டத்தைச் செயற்படுத்துதல்.
- ஊடகப் பரப்புரைகளை மேற்கொள்ளல்.
- வர்த்தகக் கண்காட்சி நடாத்துதல்.
- ஊடகத் தொடர்புகளைப் பேணல்.
- அனுசரணை வழங்குதல்.
- உள்ளூர் / வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்கள்.
- செய்தி மடல்கள் வெளியிடல்.

04 புள்ளிகள் x 2 = 08 புள்ளிகள்

(iii) ஓவியக் கண்காட்சிக்காக நிகழ்வு முகாமையாளர் ஒருவர் பயன்படுத்தப்படுவாரெனில், அந்நிகழ்வில் அவரது கடமைகள் **மூன்றினை** விவரிக்குக.

- நிகழ்வின் கருப்பொருள் மற்றும் இலக்கினை இனங்காணல்.
- திட்டமிடல்.
- அடிப்படை மூலதனச் செலவு பற்றித் திட்டமிடல்.
- நிகழ்வு இடம்பெறும் இடத்தை முன்பதிவு செய்தல்.
- இலக்குக் குழுவை இனங்காணல்.
- நிகழ்விற்கு அழைக்கப்பட வேண்டியவர்களைத் தீர்மானித்தல்.
- பாதுகாப்புத் தொடர்பாக திட்டமிடல்.
- அவசர நிலைமைச் செயற்பாட்டினைத் திட்டமிடல்

Department of Examinations - Sri Lanka

- செவிப்புல – கட்புல நிகழ்ச்சிகளுக்குத் திட்டமிடல்.

(கடமைகள் யாவும் ஓவியக் கண்காட்சி அடிப்படையில் விபரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.) (மேற்குறிப்பிட்டவற்றுடன் தொடர்புடைய ஏனைய பொருத்தமான கடமைகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தால், அவை கவனத்திற் கொள்ளப்படலாம்.)

04 புள்ளிகள் x 3 = 12 புள்ளிகள்

(iv) செய்திப் பத்திரிகைகளில் படைப்பாக்க மொழியைப் பயன்படுத்துவதைப் பின்வருவனவற்றின் பேரில் உதாரணங்களுடன் விபரிக்குக.

* தலையங்கங்கள்
* சித்திரிப்புக் கட்டுரைகள்

தலையங்கங்கள்

- எளிமையான மொழி.
- குறிப்பாக விடயத்தை உணர்த்திய வாக்கியங்கள்.
- கவனத்தை ஈர்க்கும் மொழி.
- தூண்டலை உருவாக்கும் மொழி.
- ஆர்வத்தைத் தூண்டும் மொழி.

சித்திரிப்புக் கட்டுரைகள்

- கட்டுரையின் கருப்பொருள் சார்ந்த மொழிப் பயன்பாடு (Thematic use of language).
- கட்டுரைக்குப் பொருத்தமான மொழிப் பயன்பாடு.
- உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ளக்கூடியவகையில் மொழி பயன்படுத்தப்படல்.
- வாசகரின் அவதானத்தை / கவனத்தை ஈர்க்கும் மொழி.
- கட்டுரையாளர் தனக்குரித்தான மொழியைப் பயன்படுத்தும் வாய்ப்பு.

(ஆகக்குறைந்தது தலா இரண்டு குறிப்புகள் ஒவ்வொரு தலைப்பின் கீழும் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு குறிப்புக்கும் தலா ஒவ்வொரு உதாரணம் தரப்பட வேண்டும்.)

உதாரணங்களுக்கு	**01 புள்ளி x 04 = 04 புள்ளிகள்**
விபரிக்கப்பட்டிருந்தால்	**06 புள்ளிகள் x 02 = 12 புள்ளிகள்**
	மொத்தம் = 16 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

9. பூகோள அபிவிருத்திப் பிரச்சினைகளை புதிய பரிமாணங்களின் ஊடாகக் கற்பது, தொடர்பாடல் அணுகுமுறைகளை விருத்திசெய்ய வழிசெய்கிறது.

(i) இடைத்தொடர்பு விருத்திக்காக ஐக்கிய நாடுகள் சபையினால் இனங்காணப்பட்டுள்ள தொடர்பாடல் பிரவேசங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

- நடத்தை மாற்றத்திற்கான தொடர்பாடல்
- சமூக மாற்றத்திற்கான தொடர்பாடல்
- பரிந்து பேசுவதற்கான தொடர்பாடல்
- ஊடக மற்றும் தொடர்பாடல் சூழலை வலுவூட்டல் மற்றும் செயற்படுத்தல்.

02 புள்ளிகள் x 2 = 04 புள்ளிகள்

(ii) கிராமப் பகுதிகளில் அபிவிருத்திப் பிரச்சினைகளை அடையாளங்காண்பதற்கு ஆய்வினைப் பயன்படுத்துவதன் **இரண்டு** நன்மைகளைச் சுருக்கமாக விபரிக்குக.

- நிலவக்கூடிய பிரச்சினைகளை, உரிய தன்மைகளுடன் இனங்காண முடியும்.
- குறுகிய காலத்தில் பிரச்சினைகள் தொடர்பான தரவுகளைச் சேகரிக்க முடியும்.
- தரவு மூலகர்த்தாக்கள் (தகவலாளிகள்) விசாலமான எண்ணிக்கையிலிருந்தாலும் தகவல்களைப் பெற முடியும்.
- வெவ்வேறு விடயங்கள் சார்ந்தும் பரந்த தரவுகளை ஒரே தடவையில் சேகரித்துக் கொள்ள முடியும்.
- தொலைவிலுள்ள தரவுகளைக் கூட, எவ்வித பிரச்சினையுமின்றி சேகரித்துக் கொள்ள இயலுமாயிருத்தல்.
- தரவுகளைச் சுயமாக (Manual) மற்றும் பிரயோகங்கள் (Apps) வழியாகப் பகுப்பாய்வு செய்து கொள்ளும் வாய்ப்புக் காணப்படுதல்.

04 புள்ளிகள் x 2 = 08 புள்ளிகள்

(iii) அபிவிருத்திக்கான தொடர்பாடல் பற்றிய ஆய்வு நிகழ்ச்சித் திட்டமொன்றை மேற்கொள்ளும்போது, களத்தில் பின்பற்ற வேண்டிய ஆய்வு அறநெறிப் பயிற்சிகள் **மூன்றினை** உதாரணங்களுடன் விபரிக்குக.

- ஆய்வின் பண்பு மற்றும் தரத்தைப் பாதுகாத்தல்.
- தரவுகளைத் திட்டமிட்ட வகையில் திரிபு செய்யாமை.
- தவறான தரவுகளை உள்ளடக்காமை.
- தரவு வழங்குநரின் விருப்புடன் மாத்திரம் அவரை ஆய்வில் இணைத்துக் கொள்ளல்.
- ஆய்வு தொடர்பாகவும், அதன் அடிப்படை நோக்கங்கள் பற்றியும் தரவு வழங்குநருக்குத் தெளிவுறுத்தல்.
- தரவு வழங்குநரின் தனிப்பட்ட விடயங்களைப் பாதுகாத்தல்.
- தரவு வழங்குநர் சுதந்திரமாகத் தனது கருத்துக்களை வெளியிடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

Department of Examinations - Sri Lanka

- தரவு வழங்குநரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல்.
- ஆய்வுச் செயற்பாட்டில் ஆய்வாளர் தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யாதிருத்தல்.

(மேற்குறித்தவற்றுடன் வேறு ஏதேனும் தொடர்புடைய அறநெறிப் பயிற்சிகள் பொருத்தமாகக் குறிப்பிடப்பட்டிருப்பின், அவை கவனத்திற் கொள்ளப்படலாம்.)

உதாரணங்களுக்கு 01 புள்ளி x 03 = 03 புள்ளிகள்

விளக்கியிருந்தால் 03 புள்ளிகள் x 03 = 09 புள்ளிகள்

மொத்தம் = 12 புள்ளிகள்

(iv) அபிவிருத்திச் செயன்முறையொன்றில் பங்கேற்பு ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் **நான்கு** அம்சங்களை விளக்குக.

- ஜனநாயக உணர்வுகளை மேம்படுத்தல்.
- சமூகத்தவர் பங்கேற்பை அதிகரித்தல்.
- பிரஜைகளின் அரசியற் செயற்பாடுகளை ஊக்குவித்தல்.
- மக்களிடையேயான இடைத் தொடர்புகளை விருத்தி செய்தல்.
- அரசியல் தலைவர்களிடம் பொது மக்கள் நேரடியாக வினாக்களை எழுப்பும் வாய்ப்பு.
- மெய்நிகர்த் தொடர்பாடல் மூலம் பாரம்பரிய ஊடகங்களின் வழியாக ஏற்படும் தொடர்பாடல் தடைகள் இழிவளவாக்கப்படுதல்.

04 புள்ளிகள் x 4 = 16 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

10. (i) தென்கிழக்கு ஆசியாவில் முதற்தடவையாக வானொலி அறிமுகஞ்செய்யப்பட்ட நாட்டினையும் தசாப்தத்தினையும் பெயரிடுக. (04 புள்ளிகள்)

- இலங்கை
- 1920 ஆம் தசாப்தம்

02 புள்ளிகள் x 2 = 04 புள்ளிகள்

(ii) பின்வரும் கமெரா எடுப்புக்கள் சினிமாவில் பொருத்தமான வகையில் இடம்பெறும் சூழ்நிலைகளை விளக்குக.

(a) இடைநிலை எடுப்பு

(b) நீள் எடுப்பு

a. **இடைநிலை எடுப்பு**

கதாபாத்திரங்களின் அல்லது காட்சிப்படுத்தப்படும் பொருட்களின் தோற்றப்பாடு தெளிவாகக் காட்சிப்படுத்தப்படும்.

b. **நீள் எடுப்பு**

காட்சிப்படுத்தப்படும் கதாபாத்திரங்கள் அல்லது பொருட்களின் முழுமையான தோற்றமானது உடனடிப் பின்னணியுடன் (Immediate Background) எடுத்துக்காட்டப்படும்.

(இடைநிலை எடுப்பையும் நீள் எடுப்பையும் பொருத்தமாக எடுத்துக்காட்டும் வகையில் சூழ்நிலைகள் குறிப்பிடப்பட்டு, அவை விளக்கப்பட்டிருக்க வேண்டும்.)

04 புள்ளிகள் x 2 = 08 புள்ளிகள்

(iii) பண்பாட்டிடை விழிப்புணர்வை வலுப்படுத்த சினிமா பயன்படக் கூடுமான வழிகளை **மூன்று** அம்சங்களினூடாக விபரிக்குக.

- வெவ்வேறு பண்பாடுகள் தொடர்பில் அறிவையும் புரிதலையும் வழங்குதல்.
- வெவ்வேறு பண்பாடுகளின் அடிப்படை விழுமியங்கள் வெளிக்காட்டப்படுதல்.
- வெவ்வேறு பண்பாடுகளின் ஒத்த இயல்புகள் எடுத்துக் காட்டப்படுதல்.
- பண்பாட்டுச் சமநிலையை வெளிப்படுத்தப் போதுமான வாய்ப்புக்களை அடையாளங் காணுதல்.
- பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கான வாய்ப்புக்களை வெளிக்காட்டுதல்.
- பண்பாட்டுப் பல்வகைமை தொடர்பான விழிப்புணர்வை உருவாக்குதல்.
- பண்பாட்டு வேறுபாடுகளை ஏற்றுக் கொள்ளும் / அங்கீகரிக்கும் நிலைப்பாடுகளை ஊக்குவித்தல்.
- பண்பாடுகளுக்கிடையிலான ஒண்றிணைவை வலுப்படுத்தும் போக்குகளை விருத்தி செய்தல்.

(சினிமா வழியாகப் பண்பாட்டிடை விழிப்புணர்வை வலுப்படுத்த உதவும் வழிகள் பதிலில் விபரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.)

04 புள்ளிகள் x 3 = 12 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

(iv) சினிமாப் படைப்புக்களில் புலமைச் சொத்துச் சட்டம் எவ்வளவு முக்கியமானது என்பதைப் பின்வரும் அம்சங்களின்பேரில் கலந்துரையாடுக.

(a) பொருளாதார உரிமைகள்

(b) நியாயமான பாவனை (16 புள்ளிகள்)

a. **பொருளாதார உரிமைகள்**

- மொழி பெயர்த்தல் (Translation)
- மீள் தயாரிப்பு (Remaking)
- வாடகைக்கு வழங்குதல் (Rent)
- விநியோகம் (Distribution)
- ஏற்றுமதி – இறக்குமதி (Import and Export)
- காட்சிப்படுத்துதல் (Screening)
- ஒளிபரப்புதல் (Broadcasting)
- பிரபல்யப்படுத்தல் மற்றும் விளம்பரம் (Promotion and Advertising)
- உரிமையாண்மை நிலை (Status of ownership)
- ஆக்கியோன் உரிமை (Authorship)

b. **நியாயமான பாவனை**

- விமர்சனம் / திறனாய்வு
- செய்தி அறிக்கையிடல்
- கற்றல் நோக்கங்கள்
- புலமைப்பரிசில்
- பரிசோதனை

(புலமைச் சொத்துச் சட்டத்துடன் இணைந்த மேற்குறிப்பிட்ட அம்சங்கள் சினிமாப் படைப்புகளில் தொடர்புபடும் வழிகள் அவசியம் கலந்துரையாடப்பட வேண்டும்.)

(ஒவ்வொரு அம்சங்கள் சார்ந்தும் ஆகக் குறைந்தது தலா இரண்டு குறிப்புக்கள் தரப்பட வேண்டும்.)

08 புள்ளிகள் x 02 = 16 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

11. ஊடகங்களில் புதிய போக்குகளுடன் கட்டுப்பாடுகளும் கொள்கைகளும் விரிவாக்கம் பெறுகின்றன.

(i) நாட்டின் ஊடகக் கொள்கையை விருத்திசெய்யும்போது கவனஞ்செலுத்த வேண்டிய **இரண்டு** அம்சங்களை எழுதுக.

- ஊடகத் தொழிற்துறையின் உரிமையாண்மை
- தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளும் விருத்தியும்
- பொதுமக்களுடனான ஊடகத் தொடர்பு
- ஊடக அதிகாரிகள் மற்றும் வணிகச் சந்தையின் செயற்பாடு
- துல்லியத்தன்மை, நடுநிலைத் தன்மை மற்றும் நேர்மை ஆகியவற்றுக்கு மதிப்பளித்தல்.
- மக்கள் மத்தியிலான சமூக அமைதியை வலுப்படுத்துவதன் மூலம் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தல்.
- ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளைச் சுயாதீனமாக்குவதன் ஊடாக ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புதல்.
- சமூக ஒழுக்க நெறிகள் மற்றும் ஊடக அறநெறிகள் மீதான அவதானம்.

02 புள்ளிகள் x 2 = 04 புள்ளிகள்

(ii) இலங்கை ஊடகப் பெறுநர்கள் தொடர்பில் **இரண்டு** புதிய போக்குகளை விபரிக்குக.

- பெறுநர்கள் புதிய தொழினுட்பப் பாவனையில் தீவிர ஆர்வம் காட்டல்.
- செயற்படும் பெறுநர்களாக ஊடக உள்ளடக்கத்தைக் கட்டியெழுப்பும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.
- தொடர்பாடல் செயன்முறையின் போது பெறுநர்களின் பின்புலமும் வகிபங்கும் மாற்றமடைகின்றன.
- பாரம்பரிய ஊடக வகிபாகம் மாற்றமடைதல்.
- பொது மக்கள் செய்தி அறிக்கையிடலில் ஈடுபடுதல்.
- விசேட துறைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் பெறுநர் குழு தோற்றம் பெற்றமை.
- பெறுநர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து காணப்படுதல்.
- ஒத்ததன்மையினரல்லாத, பல்வகைமையுடன் கூடிய பெறுநர் குழுக்கள் பரவலடைதல்.
- பெறுநரது தேவைக்கேற்ப ஊடகம் செயற்படுதல்.
- பல்லூடகப் பயன்பாடு.

04 புள்ளிகள் x 2 = 08 புள்ளிகள்

(iii) ஊடகக் கட்டுப்பாடுகளுக்குப் பொறுப்பான **மூன்று** அமைப்புக்களைப் பெயரிட்டு, அவற்றின் வகிபங்குகளை விளக்குக.

- பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச் சபை (Public Performance Control Board)
- இலங்கை பத்திரிகைப் பேரவை (Sri Lanka Press Council)
- இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (Telecommunications Regulatory Commission of Sri Lanka)
- இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு (Press Complaints Commission of Sri Lanka)
- இலங்கை கணினி அவசர சேவைகள் இணைப்பு நிலையம் (Sri Lanka Computer Emergency Readiness Team - SLCERT)

Department of Examinations - Sri Lanka

பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச் சபை (Public Performance Control Board):

- 1912இல் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவொன்றினால் இது உருவானது.
- கண்காட்சி, பிரசங்கம், திரைப்படம் போன்றவை பொதுமக்களுக்கு முன்வைக்கப்படுவதற்கு முன்னர் அவற்றைக் கண்காணித்து அதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் இதன் நோக்கமாகும்.
- 1951ஆம் ஆண்டு 23ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் இந்நடவடிக்கையை மேற்கொள்ளப் பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச்சபை ஸ்தாபிக்கப்பட்டது.
- இதன் செயற்பாடுகளில் அதிகம் கலந்துரையாடல்களுக்கு உட்படுவது திரைப்படங்கள் திரையரங்குகளுக்காக வெளியிடப்படும்போது வழங்கப்படும் சான்றிதழ் தொடர்பாக ஆகும். இன்று X, U மற்றும் A ஆகிய தரங்களில் திரைப்படங்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.
- இச்சபை மூலம் காலத்துக்குக் காலம் தயாரிக்கப்படும் வழிகாட்டிக் கோவைக்கு ஏற்ப திரைப்படங்களின் வசன அமைப்புக்களைக் கண்காணித்தல், தெரிவு செய்யப்பட்ட காட்சிகளை நீக்குதல் போன்றவை மேற்கொள்ளப்படும். சில நேரங்களில் திரைப்படங்கள் முழுமையாகவும் தணிக்கைக்குட்படும்.

இலங்கை பத்திரிகைப் பேரவை (Sri Lanka Press Council):

- இலங்கையின் பத்திரிகைகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக அரசால் உருவாக்கப்பட்டதாகும். 1973ஆம் ஆண்டு 5ஆம் இலக்க இலங்கைப் பத்திரிகை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் இது நடாத்தப்பட்டு வருகிறது.
- பத்திரிகைகளைத் தொழில்ரீதியாக மேன்மையுறச் செய்தல், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல், பத்திரிகை ஒழுக்கநெறிகளைப் பாதுகாத்தல், பத்திரிகை ஒழுக்கநெறிகளைப் பேணச்செய்தல், பிரஜைகளின் உரிமைகள் பற்றிய உணர்வை ஏற்படுத்தல் உட்பட்ட பல்வேறு இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பத்திரிகைச் சபை ஆரம்பிக்கப்பட்டது.
- இலங்கைப் பத்திரிகைச் சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி, ஆணையாளராவார். அதன் தலைவர் உட்பட பணிப்பாளர் சபை நியமிக்கப்படுவது ஜனாதிபதியால் ஆகும்.
- இலங்கைப் பத்திரிகைச் சபையின்கீழ் 1981 இல் வெளியிடப்பட்டுள்ள ஒழுக்கநெறிகளை மீறுதல் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளை விசாரிக்கும் நடவடிக்கை தலைவர் தலைமையிலான பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்படும்.
- பத்திரிகை ஒழுக்க நெறிகளை மீறிய குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்து தீர்மானத்தை வெளியிட பகுதியளவான நீதிமன்ற அதிகாரங்களும் சட்டத்தின்மூலம் இதற்கு வழங்கப்பட்டுள்ளது.
- பத்திரிகை ஆணையாளர் (Press Commissioner) ஆணைக்குழுவின் நிர்வாக நடவடிக்கைளை மேற்கொள்வதோடு, பத்திரிகைகளை ஆய்வுசெய்து அவற்றில் ஏற்படக்கூடிய ஒழுக்கநெறி மீறப்படும் சந்தர்ப்பங்களை இனங்கண்டு பணிப்பாளர் சபைக்கு அறிவுறுத்தும் பணியைச் செய்வார்.

Department of Examinations - Sri Lanka

இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
(Telecommunications Regulatory Commission of Sri Lanka):

- 1996ஆம் ஆண்டு 27ஆம் இலக்கத் தொலைத்தொடர்பு சட்டத்தின்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனமாகும். இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு எனும் வகையில் இலத்திரனியல் செய்திகள் மற்றும் இலத்திரனியல் தொழிற்துறையின் தணிக்கைச் செயற்பாடு, பொதுமக்களைப் பாதுகாக்கும் செயற்பாடுகள் இங்கு மேற்கொள்ளப்படும்.
- இலத்திரனியல் தொலைத்தொடர்புச் சேவையில் அதனுடன் இணைந்த உபகரணங்களின் வினைத்திறன் தொடர்பாகச் செயற்படும்போது, இலத்திரனியல் தொலைத்தொடர்பின் உபாய வழிமுறைகளை விருத்தி செய்தல் இவ் ஆணைக்குழுவின் நோக்கமாகும்.
- வானொலி மற்றும் தொலைக்காட்சிச் சேவைகளுக்கு அலைவரிசை ஒதுக்கீடு இதன் ஒரு பணியாகும். கையடக்கத் தொலைபேசிப் பாவனையின்போது பயனாளிகளுக்கு ஏற்படும் சிக்கல்கள் தொடர்பாக முறைப்பாடு செய்யவும், அதற்கேற்ற விசாரணைச் செயற்பாடுகளை மேற்கொண்டு தீர்வுகளை பெற்றுக் கொடுக்கவும் இவ்வாணைக்குழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.

இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
(Press Complaints Commission of Sri Lanka):

- இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், பத்திரிகை வெளியீட்டாளர் சங்கம் என்பன இணைந்து உருவாக்கிய சுயாதீனத் தணிக்கை நிறுவனமாகும். இலங்கைப் பத்திரிகை நிறுவனத்துக்கு இணைந்ததாக 2003ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்களால் வெளியிடப்பட்ட தொழில்ரீதியான வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள பத்திரிகை ஒழுக்கநெறிகளை மீறுதல் தொடர்பான முறைப்பாடுகளை இவ்வாணைக்குழுவில் முன்வைக்கலாம்.
- பொதுமக்களால் எழுத்துமூலமாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகளைக் குறித்த பத்திரிகை நிறுவனங்களுக்கு அனுப்பி, அவற்றின் உண்மைக் காரணிகளைச் சரியாகத் திருத்தம் செய்து வெளியிட வேண்டுகோள் விடுத்தல் இந்த ஆணைக்குழுவின் செயற்பாடாகும்.
- முறைப்பாடுகளை விசாரணை செய்ய பத்திரிகை ஊடக மற்றும் வேறு துறைசார் நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்படும்.

இலங்கை கணினி அவசர சேவைகள் இணைப்பு நிலையம்
(Sri Lanka Computer Emergency Readiness Team - SLCERT):

- இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் நிறுவனத்தின் (ICTA) கீழ் 2006ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. நாட்டின் தேசிய இணையப் பாதுகாப்பு நிறுவனமாகத் தொழிற்பட்டு பல்வேறு அமைப்புகள் மற்றும் நபர்களினால் மேற்கொள்ளப்படும் இணையவழிக் குற்றங்களுக்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளும் நிறுவனமாக இது அமைகின்றது.

Department of Examinations - Sri Lanka

- கணினியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நிதிசார் மற்றும் வேறு குற்றங்கள் தொடர்பாகவும், தீவிரவாத இயக்கங்களின் செயற்பாடுகளுக்கு எதிராக விழிப்புணர்வூட்டல், எச்சரிக்கை விடுத்தல் போன்றவையும் இதன் செயற்பாடுகளாகக் குறிப்பிடலாம்.
- கணினிசார் பிரச்சினைகளுடன் தொடர்புடைய பொதுமக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்து பொருத்தமான தீர்வுகளை முன்வைத்தல் இதன் மூலமாக மேற்கொள்ளப்படும் செயன்முறையாகும்.
- சமூக ஊடகங்களுக்குரிய போலிக் கணக்குகள் பற்றிய முறைப்பாடுகள் அதிகளவில் இந் நிறுவனத்திற்கு அனுப்பப்படும்.

(மேற்குறித்தவற்றிலிருந்து எவையேனும் மூன்று அமைப்புக்களின் வகிபங்குகள் விளக்கப்பட வேண்டும்.)

பெயரிடப்பட்டிருந்தால் **01 புள்ளி x 03 = 03 புள்ளிகள்**

விளக்கியிருந்தால் **03 புள்ளிகள் x 03 = 09 புள்ளிகள்**

மொத்தம் = 12 புள்ளிகள்

(iv) ஊடகப் பிரவேசப் போக்குகள் **நான்கினைப்** பெயரிட்டு, அவற்றுள் **இரண்டினை** உதாரணங்களுடன் விபரிக்குக.

- ஊடகக் குவிகை
- பெருந்திரளுக்கானதாக்கலில் இருந்து சிறுகூறாக்குதல்
- கட்டுப்பாட்டுத் தளர்வு
- நுகர்வுமயம்
- பண்டமயமாக்கல்
- வணிகமயப்படுத்தல்
- பூகோளமயமாதல்

ஊடகக் குவிகை:

- குவிகை என்பது பாரம்பரிய ஊடகங்களிலும் நிகழ்ந்தவொன்று. பல்வேறு பாரம்பரியத் தொடர்பாடல் முறைகள் ஒன்றிணைவதால் குவிகை ஏற்படுவதைக் காணக்கூடியதாயிருந்தது.
- இலத்திரனியல் தொடர்பாடல் ஊடகத்தின் வருகையோடு இவ்வியல்பு மேலும் விருத்தியடைந்தது. உதாரணமாக – தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்கள் இணைந்ததைக் குறிப்பிடலாம்.
- ஊடகக் குவிகை மூலம் நிகழ்வது அச்சு, வானொலி மற்றும் ஏனைய ஊடக உள்ளடக்கங்களை இணையத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு தளத்திற்குக் கொண்டுவருதலாகும்.
- ஊடகக் குவிகைக்குக் காரணமாவதும் அது வளர்ச்சியடைவதும் பொது இரசனை மற்றும் பொது நோக்கத்துடன் ஊடகத்தோடு இணைவதாகும்.

Department of Examinations - Sri Lanka

பெருந்திரளுக்கானதாக்கலில் இருந்து சிறுகூறாக்குதல்:

- தொடர்பாடல் கற்கையில் பெருந்திரளுக்கானதாக்குதல் (Massification) என்பது, பரந்த பெறுநர்களுக்குத் தகவல் அனுப்ப, அறிவித்தல் செய்ய ஊடகத்தைப் பயன்படுத்துவதாகும். எனினும், அவ்வாறு உருவான பாரிய பெறுநர்க் குழுக்கள் அவற்றிலிருந்து விலகிச் சிறு சிறு குழுக்களாக மாறுவது சிறுகூறுகளாக்குதல் (Demassification) எனப்படும்.

கட்டுப்பாட்டுத் தளர்வு:

- நடைமுறையில் காணப்படும் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல், கட்டுப்பாட்டுத் தளர்வு எனப் படும்.
- ஊடகங்கள் தொடர்பான அரச உரிமையாண்மை மற்றும் வேறு சட்டதிட்டங்களைத் தளர்த்துதல் அல்லது நீக்குதல் கட்டுப்பாட்டுத் தளர்வு ஆகும்.

நுகர்வு மயம்:

- நுகர்வுமயம் என்பது பொருட்கள் மற்றும் சேவைகளை மேம்படுத்தும் சமூக மற்றும் பொருளாதாரச் செயன்முறையாகும்.
- நுகர்வுமயப்படுத்தலின்போது, நுகர்வோரின் தேவைகள் முன்னிலைப்படுத்தப்படுவதோடு அதன் மூலம் சந்தையில் நேரடித் தாக்கமும் ஏற்படுத்தப்படும்.

பண்டமயமாக்கல்:

- ஏதேனும் பொருள், சேவை, கருத்து மற்றும் மனிதர்கள் முதலாளித்துவப் பொருளாதார முறைமைக்கு ஏற்பப் பண்டங்களாக்கி விற்பனைசெய்வதாகும்.
- கைத்தொழில்மயம் மற்றும் வணிகமயத்துடன் இணைந்த எண்ணக்கருவாகப் பண்டமயமாக்கலை இனங்காணலாம்.
- பண்டமயமாக்கலின்படி "தகவல்" என்பது வர்த்தகப் பொருளாகும். அவை ஊடகங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு பொருளாதார இலாபத்தைப் பெற்றுக்கொள்ளும்.

வணிகமயப்படுத்தல்:

- வர்த்தக விளம்பரத் தொழிலைப் பயன்படுத்தி ஊடக அமைப்புகளின் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகளின் பொருளியல் தாக்கங்களை வலுப்படுத்தல் வணிகமயப்படுத்தலாகும்.

பூகோளமயமாதல்:

- பூகோள அடிப்படையில் சிதறியும் பரந்தும் காணப்படும் பல்வேறு பண்பாட்டு இனக் குழுக்கள், பல்வேறு பூகோள இயல்புகள், பொருளாதார நடத்தை, சமூகம், அரசியல் மற்றும் பொருளாதார வழிமுறைகள் மூலம் சமகாலத் தொடர்பால் ஊடகத்தின் வளர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு ஒன்றிணைதல்

பெயரிடப்பட்டிருந்தால் 01 புள்ளி x 04 = 04 புள்ளிகள்

விளக்கியிருந்தால் 03 புள்ளிகள் x 04 = 12 புள்ளிகள்

மொத்தம் = 16 புள்ளிகள்

Department of Examinations - Sri Lanka

Department of Examinations - Sri Lanka